விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 17 திங்கட்கிழமை (01.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் தரத்தில் முதன்மையான சீமெந்து

# வடமாகாண சபைத்தேர்தல் மக்களுக்கு வழங்கிய உறுதியே!

## சர்வதேசத்துக்கு அல்ல என்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும். இதற்கான உறுதியினை நான் எமது மக்களுக்கே வழங்கியுள்ளேன். ர்வதேசத்துக்கு அல்ல என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வட இந்தியாவில் பெருவெள்ளம் ஆயிரம் பேரின் கதி தெரியவில்லை

(புதுடில்லி)

வட இந்திய மாநிலங்களில் ண்டு வாரங்களுக்கு முன் ஏற் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ள்ளப்பெருக்கிலும் நிலச்சரிவி சிக்கியவர்களில் சுமார் மூவா ம் பேர் வரையிலானோரின் இன்னும் தெரியவராமல் உள் என இந்திய அதிகாரிகள் கூறு றனர்.

யிரிழந்தவர்களின் சரியான ணிக்கை என்ன என்பது வராமலே போகலாம், ஏனெ வெள்ளத்தில் அடித்துச் லப்பட்டும் சேற்றினால் வெகு தில் புதையுண்டும் போனதால் ஏராளமானவர்களின் உடல்களை மீட்கவே முடியாது போய் விட்டது என உத்தராகண்ட் மாநில முதல்வர் விஜய்பஹுகுனா கூறுகிறார்.

பெரும்பாலும் இந்து புனித யாத்திரை வந்தவர்களாகவும் சுற்றுலாப் பயணிகளாகவும் கிட்டத்தட்ட ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக இதுவரை தெரியவந்துள்ளது.

இமய மலைப்பிரதேசமான இந்த மாநிலத்தில் ஏற்பட்ட திடீர் ஆற்று வெள்ளத்தால் இன்னும் நூற்றுக்கணக்கானோர் ஒதுக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கும் மு.காவுக்கும் முரண்பாடு அதிகரிப்பு

### அமைச்சர் பசீர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான முரண்பாடுகள் ஆழமாகிவிட்டன. இந்த நிலையில்தான் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதற்கு இது பொருத்தமான காலமாகும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - அரசு உறவு தொடர்பாக உறுதியான தீர்மானத்தை எடுக்கும் கால கட்டம் இதுவாகும் என அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளருமான பசீர் சேகு தாவூத் தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர் பீடக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் பசீர், விஷேடமாக அரசாங்கத்துக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குமிடையிலுள்ள உறவு தொடர்பாக உறுதியான ஒரு

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியில் பிளவா?

(கொழும்பு)

தென்னிலங்கையின் முன்னணி இடதுசாரி கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) மீண்டும் பிளவுபட்டு, புதுக்கட்சி யொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி. கட்சியானது 1965ம் ஆண்டு மறைந்த ரோஹண விஜேவீரவினால் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் இக்கட்சியின் அங்கத்தவர்களைக் கொண்டு 1971 மற்றும் 1988-ம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் இரண்டு

(02ஆம் பக்கம் பார்க்க)

## வி.செல்ல முயன்ற ங்கையர்கள் கைது

சென்னை)

ளத்தோணி மூலம் திரேலியா செல்ல முற்பட்ட கைத் தமிழர்கள் சிலரை கியூ பிரிவு பொலிஸார் செய்துள்ளனர்.

ருச்சி உட்பட பல்வேறு களைச் சேர்ந்த இலங்கை ர்கள், 12 பேர் கள்ளத் னி மூலம் அவுஸ்திரேலியா உள்ளதாக, க்யூ பிரிவு ஸாருக்கு தகவல் த்துள்ளது.

தனையடுத்து, மேற்கொள் ட தீவிர கண்காணிப்பை து கடந்த 28ஆம் திகதி சி கே.கே.நகரில் து இலங்கை தமிழர்களை

(20ஆம் பக்கம் பார்க்க)

## 2014 இற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல்?

(கொழும்பு)

2014-ம் ஆண்டில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு ஜனாதிபதி உத்தேசித்திருப்பதாக நம்பகமான தகவலறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான ஜோதிடர் ஒருவரின் ஆலோசனைப்படி அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக அலரி மாளிகை தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2014-ம் ஆண்டின் இறுதிக்குப்பின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜோதிட ரீதியாக சாதகமான பலன்கள் கிட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அவருக்கு நெருக்கமான ஜோதிடர் ஒருவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதனைக் கருத்திற் கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது பதவிக்காலத்தை மூன்றாவது தவணைக்கு நீட்டித்துக் கொள்ளும் வகையில் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்.

மேலும் இந்தத் தேர்தலின் போது மாகாண சபை முறை ஒழிப்பு, சிறுபான்மை கட்சிகளுக்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார விரிவுபடுத்தலுக்கு இலங்கை - இந்தியா இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக, முதலீடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பில் இவ்விரு நாட்டு அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இவ்விரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் கடந்த 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையின் போது, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை அடுத்த மூன்று ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது. தற்போது இத்தொகை ஐந்து பில்லியன் டொலர்களாக இருக்கின்றது.

அத்துடன் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் அதியுச்ச வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இந்த இலக்கை எவ்வாறு அடைவது என்பது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக இருதரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

அதேவேளை, இலங்கை - இந்திய

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜே.வி.பி...

ஆயுதக் கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

ஆயுதக் கிளர்ச்சிகளின் முடிவில் 1989-ம் ஆண்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ரோஹண விஜேவீர. கடுமையான தாக்குதலின் பின் அரைஉயிரோடு தீயில் இட்டு எரிக்கப்பட்டார்.

அவரது மறைவின் பின் ஜனநாயக அரசியலில் குதித்த ஜே.வி.பி. கட்சி, ஒரு கட்டத்தில் தென்னிலங்கையின் மூன்றாவது அரசியல் சக்தியாக உருவெடுத்திருந்தது.

இந்நிலையில் அக்கட்சியில் இருந்த ஒரு சிலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

பின்னர் (19ஆம் பக்கம் பார்க்க)


இல.172 சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## ஆறுதல் பணிமனை இடமாற்றம்

இல. 172 சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் இயங்கி வருகின்ற எமது ஆறுதல் பணிமனை 01.07.2013 திகதியில் இருந்து 51,வைமன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கத் தொடங்கும் என்பதனை எமது ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் அறியத்தர விரும்புகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதம நிறைவேற்று அதிகாரி,
ஆறுதல், இலங்கை.

(C-3819)



## மனதார வாழ்த்துகின்றேன்



சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக எம்மையும் தெரிவுசெய்து எமது குடும்பத்திற்கு ஒளியூட்டிய மதிப்பிற்குரிய யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு.அங்கஜன் இராமநாதன் அவர்களையும், திரு.சீலன், திரு.ஜேந்திரன் அவர்களையும் நன்றிகூறி சகல சௌபாக்கியங்களோடு நீடுழி வாழ்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று எல்லாம்வல்லகொட்டுடை முருகனைப்பிரார்த்திக்கின்றேன்.

வி.மயூரன்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
துணைவி,
வட்டுக்கோட்டை,
சண்டிலிப்பாய்.

(3154)



## பிரார்த்தனை அஞ்சலி

அமரர்
### ஸ்ரீமான்.முத்துவேலு வேல்விநாயகம்
அவர்கள்



எமது யா/அம்பன் அ.மி.த.க பாடசாலையின் அதிபர் திரு.வே.பரமேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் முத்துவேலு வேல்விநாயகம் அவர்கள் ஆத்ம சாந்தி அடைய எமதுநெல்லண்டைபத்திரகாளிஅம்மன், லஷ்மணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன் திருவருள் நல்க வேண்டுமென பிரார்த்தனை அஞ்சலி செய்கின்றோம்.

தும்பளை,நெல்லண்டை
பத்திரகாளி அம்மன் கோயில்
பருத்தித்துறை.

இங்ஙனம்:
சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள்
(BA, Dip.In Educated M.A)
பிரதம குரு
பரம்பரை அர்ச்சகர்,
ஆதின கர்த்தா.

(C-3818)



## ஆசி தந்தருள்க! அரசியல் மதிநுட்பத் தந்தையே!



வறுமையிலும் கல்வியமுது-ஊட்டிநின்றோம்
வளமான பிள்ளைகளை -செதுக்கி வந்தோம்
நாம் திக்கற்று திசையற்று- நின்றவேளை
விழிதுடைத்து எமையணைத்தீர்-நன்றி ஐயா
தெய்வத்தை நாம் கண்டதில்லை- எங்கள் தந்தை!
தெய்வமாய் நின்றவர் நீங்கள்தானே!-உங்கள்
ஆசிர்வாதம் வேண்டி தலை தாழ்த்துகின்றோம்!
தந்திடுக! தந்தையே தந்திடுக!
அறப்பணி நாம் செய்வோம் இது திண்ணம்!



உரிமையுடன் எமையணைத்த
உத்தமரே உதயண்ணா-உங்கள்
பிள்ளைகள் நாம் செல்கின்றோம்
பெருமையுடன் விடைபகிர்க!



தேர் கொடுத்த-பாரிபோல்
துணையாக நின்றீர்கள்
நீதி கிடைக்கும்-என்றுரைத்து
நெஞ்சுரம் தந்தீர்கள்!



கடைசிவரை கரம்பிடித்து
வழிசமைத்த எம்தலைவா!
எம்மண்ணின் பெருஞ்சொத்தே!
எம் உயிரே! ரங்கண்ணா-நன்றி
சொல்வதற்கு வார்த்தையில்லை
வணங்குகின்றோம் ஏற்றிடுக!

இன்று எம்மண்ணின் பிள்ளைகள், நாம் உரிமையுடன் ஆசிரியர்களாக எங்கள் கல்வித்திருக் கோவில்களுக்கு கால்பதிக்கின்றோம்.

என்றும் நீதியின் செங்கோலாய் நிமிர்ந்து நிற்போம்! எங்கள் கல்வி வலயத்தின் நாயகரின் கனவினை நிஜமாக்க எம்மை அர்ப்பணித்து கடமைகள் செய்வோம்.

**நிரந்தர நியமனம் பெற்ற வடமராட்சி கிழக்கு தொண்டராசிரியர்கள் வடமராட்சி கிழக்கு.**

(C-3820)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தீர்மானிக்கும் திறமை

எனக்குத் தெரிந்த அதிகாரி ஒருவர் இருந்தார். அவருக்குக் கீழே நிறையப்பேர் வேலை பார்த்தார்கள்.

அந்த அதிகாரி விபரம் தெரிந்தவர்; அனுபவசாலி.

அவரை ஒரு நாள் பார்க்கப்போயிருந்தேன். அவருடன் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் அவரிடம் வேலை பார்க்கும் ஒருத்தர் ஏதோ ஒரு பிரச்சினையுடன் அவரிடம் வந்தார்.

அவர்களுடைய அலுவலகம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை.

"இந்த பிரச்சினையை எப்படிச் சமாளிக்கலாம்? இதற்கு என்ன தீர்வு?" என்று இவரிடம் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இவர் ஒரு பெரிய அதிகாரி. உடனே அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வென்பதை அவரிடம் சொல்லி அனுப்ப வேண்டியதுதானே அப்படிச் செய்யவில்லை. வந்தவரை உட்கார வைத்து அவருடைய வாயாலேயே பிரச்சினையை தெளிவாக விளக்கிச் சொன்னார்.

அதற்கு என்ன காரணமாக இருக்கும் என்பதையும் அவருடைய வாயாலேயே சொல்லச் சொன்னார். இந்தப் பிரச்சினைக்கு என்னென்ன முறைகளில் தீர்வு காணலாம் என்பதையும் அவரிடமே கேட்டார்.

அவர் சிறிது நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு நாலைந்து தீர்வுகளைச் சொன்னார். அதில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அந்த வழியிலேயே அதை செய்து முடித்து விடுங்கள் என்று அவரிடம் சொல்லி அனுப்பினார். பிரச்சினையுடன் வந்தவர் அதற்கான தீர்வுடன் திரும்பிப் போய்விட்டார்.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நான் அவரிடம் "ஏன் சேர்... உங்களுக்குக் கீழே வேலை பார்க்கும் அந்த பணியாளர் உங்களிடம் வந்தால் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தானே வருகிறார். நீங்கள் என்னவென்றால் அவரையே உட்கார வைத்து அந்தப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே இது தான் நிர்வாகமா?" என்று கேட்டேன்.

"ஆமாம்" என்றார் அவர். அதன் பின் விளக்கமும் கொடுத்தார்.

நம்மிடம் வேலை பார்க்கும் ஒருத்தர்... பிரச்சினையோடு மட்டும் நம்மிடம் வருபவராக இருக்கக் கூடாது. அப்படி அவர் வரும் போதே அதற்கான நாலைந்து தீர்வுகளையும் கொண்டு வருபவராக அவர் இருக்க வேண்டும்.

அந்த அளவுக்கு அவரைத் தயார்படுத்த வேண்டியது நமது பொறுப்பு.

ஒரு விடயத்தைத் தீர்மானிப்பவர் அல்லது முடிவெடுப்பவர் வெறுமனே தீர்மானிப்பவராக மட்டும் இருக்கக் கூடாது. தீர்மானிக்க கற்றுக் கொடுப்பவராகவும் இருக்க வேணடும்.

அப்படிக் கற்றுக் கொடுத்தால் தான் அவர் முன்னேற முடியும்.

அவர்களே பிரச்சினையை புரிந்து கொள்வதற்கும் அதற்குச் சரியான தீர்வு கண்டுபிடிப்பதற்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படிக் கொடுத்தால் அவர்களுடைய வளர்ச்சிக்கு நாம் உதவுகிறோம் என்று அர்த்தம்.

அப்படிச் செய்யாமல் பிரச்சினையுடன் வருபவர்களை உட்கார வைத்து நாம் யோசித்து முடிவு சொல்லி அன்பினால் அவர்களுடைய வளர்ச்சிக்கு நாம் தடையாக இருக்கிறோம் என்று அர்த்தம்.

இதைப் புரிந்து கொண்டு ஒரு தலைமை அதிகாரி தனக்குக் கீழே உள்ள பணியாளர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

பிரச்சினைகளைக் கொண்டு வருபவர்களே அதற்கான சில தீர்வுகளையும் கொண்டு வரும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

அப்படி இல்லாமல்...

அதைத் தீர்மானிப்பதற்கு நீயார்... இங்கே நான் தான் எல்லாம் என்று சொல்பவர் விபரமில்லாதவர் என்று அர்த்தம்.

முடிவெடுப்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சுயமாக சிந்திக்கும் திறமை வளர்வதற்கு மேலதிகாரிகள் ஒரு கிரியா ஊக்கியாய் செயற்பட வேண்டும். அப்படிச் செயற்படுபவர்தான் சிறந்த நிர்வாகி. இன்றைக்குப் பல இடங்களில் நிலைமை இப்படியில்லை. அதனால்தான் எந்த அலுவலகத்தில் போய் எந்த ஒரு சின்ன விபரம் கேட்டாலும் எனக்கு கையைக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

ஒரு அலுவலகத்தில்... ஒரு கிளார்க் வந்து தன்னுடைய நாற்காலியில் உட்கார்ந்தார். நிமிர்ந்து பார்த்தார்.

எதிரிலுள்ள மேசையில் ஒரு தேள் இருந்தது. உற்றுப் பார்த்தார்.

உடனே ஒரு தடியை எடுத்து அடிக்க வேண்டியது தானே... அவரோ அடிக்காமல் கடிகாரத்தைப் பார்த்தார்.

"ஏங்க? தேளை அடிக்க வேண்டியது தானே?" என்றேன்.

"பத்து மணிக்கு மனேஜர் வந்து விடுவார். அவரிடம் அனுமதி கேட்டு விட்டு இந்த தேளை அடிக்கலாம் என்று பார்க்கிறேன்" என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நாட்டில் இனத்துக்கொரு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா?

## திருமலை மறை மாவட்ட ஆயர் கேள்வி

நாட்டின் சட்ட அமுலாக்கல் நடைமுறை தற்போது கேள்விக் குறியாகியுள்ளது. இனத்திற்கொரு சட்ட அமுலாக்கல் நடைமுறை தற்போது கையாளப் படுகின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வேகமாக ஏற்பட்டு வருகின்றது என்று திருகோணமலை கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் அதிவண. அருட்கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கூறியுள்ளார்.

திருகோணமலை றோட்டரி கழகத்தின் 35 ஆவது தலைவர் பதவியேற்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிரீஸ் மனிதன் என்ற விடயம் அச்சத்தை ஏற்படுத்திய போது பொது மக்கள் தமது பாதுகாப்பிற்காக சிறு ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் கிரீஸ் மனிதன் என தாம் சந்தேகித்தவர்களைத் தாக்கியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளில் கலந்து கொண்டவர்களை பாதுகாப்பு படையினர் கண்மூடித்தனமாக தாக்கியதுடன், அதிகமானவர்களைக் கைது செய்து சிறைகளிலும் அடைத்தனர். ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறி விட்டது என்றும் ஆயர் சுவாம்பிள்ளை குறிப்பிட்டார்.

சில மதவாத அமைப்புக்கள் பள்ளிவாசல்களையும் தேவாலயங்களையும் மதகுருமார்களையும் தாக்கி சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. மொத்தத்தில் அவ்வமைப்புக்கள் சட்டத்தை தமதுகைகளில் எடுத்து செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால், இவர்களை இதுவரை யாரும் கைது செய்யவும் இல்லை, தண்டிக்கவும் இல்லை. இது ஜனநாயக சமூகத்திற்கு ஏற்புடைய நடைமுறை அல்ல என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். கல்வித் தகைமைகளாக க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடகமொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பத்தாரிகள் முதலாவது தடவையில் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பத்தாரியின் உயரம் 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது) ஆகவும் கண்ணின் பார்வை 6/12 க்கு குறைவாகவும் இருத்தலாகாது. விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு, கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், விசேட சாதனையுடன் விளையாட்டுத்துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்கு புறம்பான சான்றிதழ்களும், சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் (இருப்பின்) தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியவாறு பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு) பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல, 375 ஸ்ரீசம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பம் கோரல் பற்றிய மேலதிக தகவல்களை பெறுவதற்கு வலம்புரி பத்திரிகை அலுவலகத்துடனோ அல்லது எதிர்வரும் 5 ஆம் திகதி வெளியாகவுள்ள வர்த்தமானிப் பத்திரிகையிலோ பார்வையிடலாம். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-160 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 70 | 120 | 100 |
| தக்காளி | 130 | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 100 | 100 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 140-160 | 140-200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 40 | 50 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 100 | 60 | 100 | 120 |
| கறிமிளகாய் | 140 | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 160 | 400 | 200 |
| போஞ்சி | 100 | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 15 | 20 | 20 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

01.07.2013
(ஆனி17, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
நவமி பின்னிரவு 4.16 மணிவரை
ரேவதி முன்னிரவு 8.50 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை

**மேடம்** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், சஞ்சலங்கள் கூடும், அரசு வழியில் அனுகூலமுண்டு, பிதா சிந்தனையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக்குறைவான நாள்.

**இடபம்** செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கை கூடும், வருமானம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் மூலம் நன்மைகள் இடம்பெறலாம், பெருமைகள் வந்துசேரும் நாள்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கடின உழைப்பில் ஈடுபாடு காட்டுவீர்கள், உற்சாகம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,மற்றவர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கடகம்** புதிய திட்டங்கள் கைகூடும், சிலருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம், எதிபாராத பயணங்களால் நன்மையுண்டு, ஆன்றோர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**சிங்கம்** ஆதரவாக இருந்தவர்களும் சிலவேளைகளில் மனஸ்தாபப்படும் வாய்ப்புண்டு, வேலைச்சுமை கூடும், பணக்குறைவு ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி** அபூர்வ சந்திப்புண்டு, பண வரவுகள் திருப்திகரமாக அமையும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், அந்நியர் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** நோய்கள் குணமடையும், செய்தொழில் மேன்மையுண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்கள் கைகூடும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, சில காரிய இடையூறுகள் இடம்பெறலாம், சொந்தங்களால் நன்மையுண்டு, பிறருக்கு உதவுவதில் பிரியப்படுவீர்கள், வியாபார மேன்மையுண்டு.

**தனுசு** பயந்த சுபாவமுண்டு, செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிரியம் கூடும், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அந்நியர் சந்திப்புண்டு, வருமானம் திருப்தி தரும், கௌரவமான நாள்.


**கும்பம்** குடும்பக் கவலை ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, அதிக பிரையாசையால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, போசன சுக முண்டு.

**மீனம்** பெரியோர் சந்திப்புண்டு, புதிய பொருட்கள் வாங்குவதில் நாட்டம் காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர். போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய வர்த்தகத்தை 3 ஆண்டில் இரட்டிப்பாக்க முடிவு



(கொழும்பு)
இந்தியா- இலங்கை இடையேயான வர்த்தகத்தை 3 ஆண்டுகளில் இரட்டிப்பாக்க முயற்சிக்கப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கு இடையே வர்த்தக உறவு பற்றிய பேச்சு வார்த்தை கொழும்பில் கடந்த 24, 25 திகதிகளில் நடந்தது.

இதைத் தொடர்ந்து இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது,

இலங்கையின் வர்த்தக தொடர்பு நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. இரு நாடுகளுக்கு இடையே தற்போது ஆண்டு வர்த்தகம் 5 பில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. இதை அடுத்த மூன்றாண்டுகளில் 10 பில்லியன் டொலராக உயர்த்த வேண்டுமென இருதரப்பிலும் முடிவு செய்யப்பட்டது.

இருநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களில் தேவையான திருத்தங்களை விரைவில் மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# MSc கற்கைகளை வழங்கும் SLIIT




இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிலையமான SLIIT ஆனது ஐக்கிய இராச்சியத்தின் ஷெஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து என்டர்பிரைஸ் அப்ளிகேஷன் டெவலப்மன்ட் பிரிவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற MSc. பட்டதாரி கற்கைகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்கின்றது.

SLIIT ஆனது 2 வருடங்களில் பூர்த்தி செய்யக்கூடியதும், 4 செமஸ்டர்களைக் கொண்டதுமான முதுமானி கற்கைகளை வழங்குகிறது. MSc. in Information Technology கற்கையானது விசேடமாக தகவல் தொழில்நுட்பம், கணினி அறிவியல் மற்றும் கணினி பொறியியல் போன்ற துறைகளை சேர்ந்த பட்டதாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இக் கற்கை மூலம் IT தொடர்பான தகவல்கள் வழங்கப்படு கின்றன. இப் பட்டப்படிப்பானது துறைசார் நவீன போக்குகள், IT துறையின் அபிவிருத்திகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

இக் கற்கையானது மாணவர்களிற்கு நவீன வியாபார வளர்ச்சி மற்றும் தகவல் முகாமைத்துவ கருவிப் பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டுடன் முன்னேறும் வியாபார சூழ்நிலைகளை எதிர்கொள்ளகூடிய வகையிலான தகவல் முகாமைத்துவ திறன்களை வழங்குகிறது. இக் கற்கையை பூர்த்தி செய்த மாணவர்கள் தகவல் முகாமைத்துவ சிஸ்டத்தினை திறம்பட நிறுவனங்களுள் கையாள முடிவதுடன், மதிப்பீகள், பொருத்தமான வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை மாற்றியமைப்பதற்கான தகுதிகளையும் பெற்றுக்கொள்வர்.

SLIIT இன் MSc. in Information Systems கற்கையானது IT துறையில் உயர் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் வணிகத்தில் அதன் வெற்றிகரமான ஒருங்கிணைப்பு குறித்து கவனம் செலுத்துகிறது. நவீன வணிக நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டு முகாமைத்துவத்திற்கு வணிக மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின அவசியம் காணப்படுகிறது. இது குறித்து மாணவர்கள் தெளிவான அறிவினை பெற்றிருத்தல் அவசியமாகும். இக் கற்கையானது வியாபார தகவல் தொழில்நுட்ப துறையில் நிபுணர்களாக வர விரும்பும் பட்டதாரிகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.




பின்ன என்ன அதுக்காக எங்களோட மதிப்பை குறைச்சுக்க முடியுமா..?!




# ஹட்ச் - கார்கில்ஸ் இணைந்து விசேட ஊக்குவிப்புத் திட்டம்




ஹட்ச் - கார்கில்ஸ் ஃபுட் சிட்டியுடன் இணைந்து தனது வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் வகையில் ஜுன் மாதம் முழுவதும் ஊக்குவிப்பு திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

ஹட்ச் முற்கொடுப்பனவு மற்றும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு நாளாந்தம் 10,000ரூபா பெறுமதியான அன்பளிப்பு வவுச்சர்களை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாளாந்த பரிசளிப்பு திட்டத்துக்கு தகுதி பெற ஹட்ச் வாடிக்கையாளர்கள் செய்ய வேண்டியது, கார்கில்ஸ் சுப்பர் மார்க்கெட் ஒன்றில் பொருட்களை கொள்வனவு செய்வது அல்லது ரீலோட் ஒன்றை மேற்கொள்வது அல்லது பிற்கொடுப்பனவு இணைப்புக்கான கொடுப்பனவை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது போதுமானது என ஹட்ச் எலையன்சஸ் மற்றும் IDD வர்த்தகங்களின் உதவி பொது முகாமையாளர் சௌமித்ரா குப்தா கருத்து தெரிவித்துள்ளார்.

பல வெற்றியாளர்கள் தாம் தமது கட்டணப் பட்டியல்களைச் செலுத்தும வேளையிலும், ரீலோட்களை செலுத்தும் வேளையிலும் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டிருந்ததாக தெரிவித்திருந்தனர்.

கொடுக்கல் - வாங்கல்களில் எந்தவிதமான ஆகக்குறைந்த வரையறைகளும் இல்லை. ஹட்ச் வாடிக்கையாளர்கள் அனைவரும் இந்த திட்டத்தில் பங்குபற்ற முடியும் என குப்தா தெரிவித்திருந்தார்.

நாட்டின் அனைத்து பகுதிகளையும் சேர்ந்த ஹட்ச் வாடிக்கையாளர்கள் இந்த திட்டத்தில் பங்குபற்ற முடியும். நாடு முழுவதிலுமுள்ள 204 கார்கில்ஸ் புட் சிட்டிகளில் இந்த ஊக்குவிப்பு திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ரீலோட் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவின் போதும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பொன்று கிடைக்கும்.

வெற்றி பெறும் அன்பளிப்பு வவுச்சர்களை எந்தவொரு கார்கில்ஸ் புட் சிட்டியில் அல்லது எக்ஸ்பிரஸ் விற்பனை நிலையங்களிலும் பயன்படுத்தி பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளலாம்.

# வர்த்தக சலுகையை அமெரிக்கா நிறுத்தியது

## பங்களாதேஷ் அதிர்ச்சி



பங்களாதேசத்துக்கு அளிக்கப்பட்டுவந்த வர்த்தக-சலுகை நடைமுறையை மீளப்பெற்றுக்கொள்ள அமெரிக்க அரசு எடுத்துள்ள முடிவினை பங்களாதேஷ் அரசு விமர்சித்துள்ளது.

வங்கதேசத்தில் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் நிலைமைகள் அபாயகரமானதாக உள்ளதாக சுட்டிக்காட்டியே அந்நாட்டுடனான சிறப்பு சலுகைத் திட்டம் அமெரிக் காவினால் வாபஸ் பெறப்படுகின்றது.

இந்த அறிவிப்பு அதிர்ச்சி அளிப்பதாக வங்கதேச வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊக்குவிக்க தெளிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வங்கதேசம் கூறுகிறது.

கடந்த ஏப்ரலில் தலைநகர் டாக்கா அருகே தொழிற்சாலை கட்டிடமொன்று இடிந்து விழுந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையிலேயே, வங்க தேசத்தில் தொழிலாளர்களின் உரிமைகளும் வேலைத்தள பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேம்படுத்தப்படும்வரை அந்நாட்டுக்கான வர்த்தக சலுகைகள் இடைநிறுத்தி வைக்கப்படும் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது

# இலங்கையின் குறுங்கால திறைசேரி முறிகள் மீது முதலீட்டாளர்கள் ஆர்வம்

இலங்கையின் குறுங்கால அடிப்படையில் இலாபத்தை வழங்கக்கூடிய திறைசேரி முறிகள் மீது முதலீட்டாளர்கள் அதிகளவு ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றமையால் பங்குச்சந்தை மீதான முதலீட்டாளர்களின் ஆர்வம் குறைவடைந்து காணப்படுவதாக பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கான உறுதியான காரணம் எதுவெனதம்மால் உறுதியாக குறிப்பிட முடியாதெனவும், அதிகளவு பெறுமதிக்கு டொலரை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் நஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்திருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை பங்குச் சந்தை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது, அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 6,121.01 ஆகவும், எஸ் அன்ட் பி சிறிலங்கா 20 சுட்டி 3431.74 ஆகவும் அமைந்திருந்தன.

ஜுன் 24ஆம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 4,501,432,990 அமைந்திருந்தது.

கடந்த வாரம் மொத்தமாக 20, 874 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 19,746 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 1,128 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்தவார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் பரகன், சிஐஎஃவ்எல், சிலோன் லெதர், செலிங்கோ இன்ஸ். மற்றும் சிலோ ஃபினான்ஸ் போன்றன முதல் ஐந்து சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகி இருந்தன.

ஈ.செனலிங், ஹோட்டல் சேர்விசஸ், பி.சி.பார்மா, மிரமர் மற்றும் ஆசியா சியாகா போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.

இதேவேளை, சந்தை வட்டாரங்களின் மூலம் எதிர்வு கூறப்பட்டிருந்ததை போன்று, கடந்த வாரத்துக்கு முன்னைய வாரம் தங்க இறக்குமதி மீதான 10% வரி விதிப்பானது தங்கத்தின் விலையில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் டொலருக்கு நிகரான ரூபாவின் சராசரி விற்பனை பெறுமதி 132.08 ஆக பதிவாகியிருந்தது. ஐக்கிய இராச்சிய பவுணுக்கு நிகரான சராசரி விற்பனை பெறுமதி 202.04 ஆக காணப்பட்டிருந்தது. கடந்த ஒரு வருட காலப்பகுதியில் டொலருக்கு நிகராக பதிவான ஆகக்குறைந்த பெறுமதி கடந்த வார நாணய மாற்றுக் கொடுக்கல் வாங்கல்களின் போது இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.80 | 132.08 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 196.11 | 202.04 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 167.45 | 173.21 |
| சுவிஸ் பிராங் | 135.48 | 140.86 |
| கனேடிய டொலர் | 122.13 | 126.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 118.26 | 122.98 |
| சிங்கப்பூர் டொலர் | 101.18 | 104.81 |
| ஜப்பான் யென் | 1.29 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.38 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரின் விடயத்தில் முஸ்லிம் கா.விழிப்பாக இருக்கும்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் சிறுபான்மையினரின் விடயத்தில் மிக விழிப்பாகவே இருக்கும். அதற்காக முதலில் நாம் ஒருமித்த கருத்துடன் செயற்பட வேண்டும். அரசியலிலுள்ள சில சிறுபான்மையினத் தலைவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகள் பறிக்கப்படும் நிலையில் அதற்கு ஆதரவளிக்கலாம். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் ஒருபோதும் அவ்வாறான அநியாயங்கள் இழைக்கப்படுகின்ற போது மௌனமாக இருக்காது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனை மத்தியகுழு ஏற்பாட்டில் முப்பெரும் விழா கடந்த பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் மத்திய குழுவின் தலைவர் ஐ.எல்.சுலைமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற போது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைப் பாதுகாக்க செயற்படும் முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்களைப் பாதுகாக்கவும் செயற்படும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவு தான் 13 ஆம் திருத்தச் சட்டமாகும். இந்த மாகாண சபை முறைமைக்கு ஆரம்பத்தில் வித்திட்டவைகளில் ஒன்று இந்த முஸ்லிம் காங்கிரஸாகும்.

அப்போது போட்டியிட்டவர்கள் எல்லோரும் நகல் உறுப்பினர்கள். இந்த மாகாண சபைத் தேர்தலில் முதன் முதலில் போட்டியிட்டு வந்தவன் தான் என்றும் தனக்கு மாகாண சபையின் அதிகாரங்களைப் பற்றி நன்கு தெரியும். அதைப்பற்றி யாரும் தனக்கு சொல்லித்தரத் தேவையில்லை என்றும் அமைச்சர் அதாவுல்லா அமைச்சரவைக் கூட்டத்தில் கூறினார்.

மாகாணசபைத்தேர்தலில்முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று வெற்றி பெற்று ஒரு சாதனை படைத்துக் காட்டியுள்ளது. இதற்கு மக்கள் பலத்த ஆதரவை தந்துள்ளமையால் இக் கட்சி மக்கள் மத்தியில் உள்ளதை யாரும் அசைக்க முடியாது. (அ)

## மருத்துவ சங்கத்தின் தாய்ச்சங்க நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது

மருத்துவசங்கத்தின்தாய்ச்சங்கபுதியநிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சங்கம் அறி வித்துள்ளது.வாக்கிடுதல் முறையில் தெரிவு செய்யப்பட்ட இந் நிர்வாகத் தெரிவில் யாழ். போதனா வைத்தியசாலையைச்சேர்ந்த மருத்துவர்களும் வாக்களித்துள்ளனர். புதிய நிர்வாகத் தெரிவில் 3ஆவது முறையாகவும் தலைவராக வைத்தியர் ஏ.பாதெனிய தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக வைத்தியர் அத்தநாயக்கவும் செயலாளராக வைத்தியர் சமன், உப செயலாளராக வைத்தியர் உபுல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மற்றும் இயக்குநர், ஆலோசகர், பிரதிச் செயலாளர்கள், மூத்த தலைவர்கள் என 38 பொதுச் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் 42 சங்க உறுப்பினர்களில் ஒருவர் கூட தமிழராக இல்லை என அறிய முடிகின்றது.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சங்கத்தினரிடம் வினவிய போது,நாம் இதுதொடர்பில் எமது தாய்ச் சங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் ஒரு தமிழ் வைத்தியரை உறுப்பினராக சேர்த்துக் கொள்வார்கள் என உறுதியளித்துள்ளனர் என்றனர். இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த மாதம் இடம்பெறவிருந்த போதிலும் தாய்ச்சங்க நிர்வாகத் தெரிவினால் அது இடம்பெறவில்லை. எனினும் இம் மாதத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும் என யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர் சங்கம் அறிவித்துள்ளது. (அ-4)

## மின்கட்டணத்தை பார்த்ததும் அதிர்ச்சியடைந்தவர் மரணம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டணத் தொகையைப் பார்த்தவுடன் அதிர்ச்சிக்குள்ளாகி முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கை மின்சார சபையின் தலைமையகத்திற்கு தனது மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த சென்ற வயோதிபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பத்தரமுல்ல றொபர்ட் குணவர்த்தன மாவத்தையைச் சேர்ந்த எஸ்.பி.ஜி சமரதாஸ (வயது 61) என்ற வயோதிபரொருவர் நேற்று முன்தினம் இவ்வாறு மரணமடைந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த முதியவர் இலங்கை மின்சார சபையின் தலைமையகத்திற்கு மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த சென்றுள்ளார். தனது மின்சாரக் கட்டணம் இவ்வாறு திடீரென மிக அதிகளவில் அதிகரித்து இருப்பதற்கான காரணம் என்னவென வினவியுள்ளார்.

உடனே அதற்கான காரணத்தை குறித்த அலுவலகத்தர் கூறியவுடன் அதிர்ச்சியும் மயக்கமும் கொண்டவராக அந்த வயோதிபர் வாடிக்கையாளர்கள் அமரும் இடத்திற்கு சென்று அமர்ந்துள்ளார். சிறிது நேரத்தில் மூர்ச்சையுற்றவராக சுய நினைவிழந்து கீழே விழுந்துள்ளார்.

உடன் வைத்தியாசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவரை பரிசோதித்த வைத்தியர்கள் குறித்த வயோதிபர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் அவரது உயிரிழப்பிற்கு மாரடைப்பே காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக மின்சாரக் கட்டணங்கள் வழமையான கட்டணத்தை விட அதிகரிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)


**ST.JOHN' COLLEGE JAFFNA**

ST JOHN'S COLLEGE · JAFFNA · CEYLON

**invites**

The Parents, Old Boys & Well-wishers

to the

**190TH ANNIVERSARY CELEBRATION OF THANKSGIVING**

**on Friday 5th July, 2013, 4.30 p.m**

(Message- Rev.W.P.Ebenezer Joseph,
General Secretary, National Christian Council of Srilanka
Formerly President, Methodist Church in Srilanka
Choir Director: Joel Joseph, Eagle Chorus, Canada)

&

**THE ANNUAL PRIZE GIVING**

on Saturday 6th July, 2013, 10.00 am.

(Chief Guests: Prof. Suresh Canagarajah,
Edwin Erle Sparks Professor of Applied Linguistics and English,
Pennsylvania State University, USA,
& Mrs.Nanthini Canagarajah)

**Principal, Staff & Students**

Kindly take your seats 10 minutes ahead of the function.

(சி/3813)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா : 56 செவ் 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc,ACCA கணக்காளர்<br>தொ.இ:B264 | பிறப்பு: 1991 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா :44.25 செவ் 2<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G853 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா :28.5 செவ் 1<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: O/L நடத்துநர் சொந்தம்<br>தொ.இ:B629 | பிறப்பு: 1977 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா :47.25 செவ் 12<br>உயரம்: 5'3 "<br>தகைமை/தொழில்: BA,HNDA,Dip in Edu ஆசிரியர்<br>தொ.இ:G854 |
| பிறப்பு: 1977 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா : 21.5<br>தகைமை/தொழில்: O/L அலுமினிய Fitting<br>தொ.இ:B632 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா : 39.75 செவ் 7<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L தையல், மேக்கப்<br>தொ.இ:G856 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா : 28.25<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: A/L, NCC (UK)Following MCSE, CISCOBusiness Network Solution சொந்தம்<br>தொ.இ:B635 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா : 65<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில; HNDE,College,BSc ஆசிரியை<br>தொ.இ:G857 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தில் அத்திபார சான்றிதழ் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)


இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானத்தில் அத்திபார சான்றிதழ் கற்கைநெறிக்கான(Foundation Certificate in Science) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.(உ/த) இல் 3 சித்திகளை பெற்றுக்கொள்ளத் தவறியோருக்கு உயர்கல்வி வாய்ப்பினை வழங்கும் நோக்கில் விஞ்ஞானப் பட்டமாணிக்கு நுழைவு வழங்குவதன் பொருட்டு நடத்தப்படும் அத்திபாரச் சான்றிதழ் கற்கைநெறியே இதுவாகும். எனவே, இச் சான்றிதழ் கற்கை நெறியைப் பின்பற்றுவதன் மூலமாக விஞ்ஞானப் பட்டமாணி நெறியைத் தொடரமுடியும்.

ஆர்வமுள்ளோர் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கற்கை நெறி தொடர்பான மேலதிக தகவல்களை எதிர்வரும் 6 ஆம் திகதி பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இலவசக் கருத்தரங்கில் கலந்து கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

நன்றி :- அததெரண




# வடமராட்சி பிரதேசத்தில் குடும்பவன்முறைகள் அதிகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் குடும்பவன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் நிலைய பதிவேட்டின் மூலம் அறியமுடிகின்றது.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்திலுள்ள குடும்பங்களில், கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகளால் யாராவது ஒருவர் பொலிஸ் நிலையத்தை நாடுவதாக பதிவேட்டின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கு தொழில் வாய்ப்பின்மை,வறுமை, புரிந்துணர்வின்மை, சந்தேகம், பிறதிருமணம், சீதனம் போன்றனவையே முக்கிய காரணங்களாகும்.

இப் பிரச்சினைகளால் கணவன், மனைவிக்கிடையில் கருத்து முரண்பாடு வலுப்பெற்று தாம் பிரிந்து வாழ்வதற்கு பொலிஸ் நிலையத்தை நாடுகின்றனர்.

இது தொடர்பில் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் மட்டும் 11 வழக்குகள் இடம்பெற்றது. இதில் கணவனுடன் சேர்ந்து வாழ விரும்பாத மனைவி கணவரிடமிருந்து வாழ்வாதாரத்திற்கான உதவிப் பணத்தையும் மனைவியுடன் சேர்ந்து வாழவிரும்பாத கணவர், மனைவிக்கும், பிள்ளைக்கும் மேற்படி உதவிப் பணத்தையும் வழங்க வேண்டும் என நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-24)

# விலங்கு விசர் நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பஜார் II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்டபட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை பருத்தித்துறை வீதி குருநாதர் சுவாமி கோவிலடியிலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். ஸ்ரேசன் வீதி வைரவர் கோவிலடியிலும் வைத்து தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை றக்காவீதி இளஞ்சிங்கம் சனசமூச நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி சித்தி விநாயகர் கோவிலடியிலும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நாவலர் வீதி பாப்பையா கடைச் சந்தியிலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை றக்கா வீதி கோயில் வீதிச் சந்தியிலும் வைத்து தடுப்பு மருந்தேற்றப்படவுள்ளது.

10 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரை கோவில் வீதி ஆஸ்பத்திரிச் சந்தியிலும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை சோமசுந்தரம் வீதியிலும் வைத்து மருந்து ஏற்றப்படவுள்ளது. (அ)

# வள்ளுவர் முன்பள்ளி விளையாட்டு விழா

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி வடக்கு வள்ளுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வள்ளுவர் முன்பள்ளி மைதானத்தில் யா/உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர் மதுசூதனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோருடன் மேலும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ம-64)




# கருத்தரங்கு

இலங்கைக் கல்வி நிர்வாக சேவை மற்றும் அதிபர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டத்தின் விசேட செயற்றிட்டமாக இலங்கைக கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 .30 மணிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்கும் மேலதிக தவகல்களை பெற்றுக்கொள்ளவும் 0770540061 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)





யாழ்.தேசிய இளைஞர் சேவை மன்ற உள்நாட்டு இளைஞர் பரிமாற்றுதிட்ட ஆரம்ப நிகழ்வு சுன்னாகம் இறையியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் கணலாம். (படங்கள்:- என்.குமார், மானிப்பாய் செய்தியாளர்)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(கரவெட்டி)

வடமராட்சி குரும்பசிட்டி உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தின் இவ்வாண்டுக்கான விளையாட்டு விழாவின் அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்குமுன்னர் உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். ஜெனனுடன் 0778217853 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கழகங்கள் மாத்திரமே கலந்து கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேப்பாபிலவில் காணி சுவீகரிப்பை எதிர்த்து போராட தயாராகிறது த.தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

**முல்லைத்தீவு கேப்பாபிலவில் 2 ஆயிரத்து 26 ஏக்கர் காணிகளை சுவீகரித்து 4 ஆயிரம் இராணுவக் குடும்பங்களை குடியமர்த்த இராணுவத்தினர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை வன்மையாக கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு எதிராக இம்மாத முற்பகுதியில் தமிழ் மக்களை அணி திரட்டி மாபெரும் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளது.**

அதேவேளை இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர் நீதிமன்றத்திலும் வழக்குகளை தாக்கல் செய்யவுள்ளது.

வடக்கில் பல்வேறு பகுதிகளில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காகவும் தமது சொந்தத் தேவைக்காகவும் காணிகளை இராணுவத்தினர் சுவீகரித்து வருகின்றனர். அந்த வகையில் வலிகாமம் வடக்கில் தமிழ் மக்களின் 6 ஆயிரத்து 324 ஏக்கர் காணிகளை அரசாங்கத்தின் அனுமதியுடன் இராணுவத்தினர் சுவீகரிப்பதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வழக்குகளை தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் முல்லைத்தீவு கேப்பாபிலவில் 4 ஆயிரம் இராணுவக் குடும்பங்களைக் குடியமர்த்துவதற்காக 2 ஆயிரத்து 26 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இறுதி யுத்தத்தின் போது முல்லைத்தீவு, கேப்பாபிலவு பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் வவுனியா மெனிக்பாம் முகாமையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அங்கு தங்கியிருந்த வேளை கேப்பாபிலவு பிரதேசத்தில் இராணுவத்தினரால் பெரிய படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. இதன் பின்னர் மெனிக்பாம் முகாமிலிருந்து ஒரே இரவில் மக்களை வெளியேற்றிய அரசு அவர்களைப் பேருந்துகளில் ஏற்றிக் கொண்டு சென்று கேப்பாபிலவு, சூரியபுரம் காட்டுப் பகுதியில் மீள்குடியேற்றம் என்ற பெயரில் இறக்கிவிட்டனர்.

அங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி தவித்த மக்கள், தற்காலிக கொட்டகைகளை அமைத்து அதில் தங்கியுள்ளனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தவை வருமாறு,

இராணுவத்தினர் முன்னெடுத்து வரும் இந்த நடவடிக்கைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது. கேப்பாபிலவுக்கு சொந்தமான தமிழ் மக்கள் காட்டுப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் அங்கு பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்ற நிலையில் அவர்களின் சொந்த இடத்தில் பாரிய படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம். இங்கு இராணுவத்தினருக்கு என்ன வேலை? இராணுவத்தினரின் குடும்பங்களைக் குடியமர்த்த அரசு என்ன நியாயத்துடன் அனுமதி வழங்கியது.

அண்மையில் புதுடில்லிக்கு இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்தச் சென்ற நாம், வடக்கு, கிழக்கில் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பிலும் எடுத்துரைத்துள்ளோம். அதேவேளை, எம்முடன் பேச்சு நடத்தும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடமும் இது தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளோம். இதற்கு மிக விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையில் மணலாறு பிரதேசத்தில் இராணுவத்தினரின் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு புதிய சிங்கள கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்த மாதிரிக் கிராமத்தை இராணுவத்தினர் உருவாக்குவதற்கான காணிகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# அமெரிக்காவில்தான் சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பில்லை

## ஏட்டிக்கு போட்டியாக இலங்கையும் அறிக்கை

இலங்கையில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து குற்றச் செயல்கள் நடப்பதாக அமெரிக்கா அதன் பிரஜைகளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை அறிவுறுத்தல்களை இலங்கை அரசின் சுற்றுலாத் துறை நிராகரித்துள்ளதுடன், அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கை செல்லும் அமெரிக்கப்பிரஜைகளுக்கு அமெரிக்க அரசினால் பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் இலங்கை பொதுப்பயணிகள் பேருந்துகளில் அமெரிக்க பிரஜைகள் பயணம் செய்யக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் பெண்கள் தனியான பயணங்களை மேற்கொள்வது பாதுகாப்பற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு எதிரான கொலை வழக்கு விசாரணைகள் காலதாமதமடைவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் இவ் எச்சரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ள இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியக முகாமைத்துவ பணிப்பாளர் ரூமி ஜெளபர் இலங்கையில் சுற்றுலாப்பயணிகளுக்கு முழுப்பாதுகாப்பு கிடைக்கிறது.

எந்தவித பிரச்சினைகளோ அச்சுறுத்தல்களோ ஏற்படமாட்டாது என உத்தரவாதமளிக்கின்றோம். சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பளிக்க தனியான பொலிஸ் பிரிவு ஒன்று இயங்குகிறது. அவர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய பாதுகாப்பை அளிப்பார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல்கள் எந்த நேரமும் இடம்பெறக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதனால் மிக கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்று பிரித்தானியா தனது நாட்டு பிரஜைகளுக்கு தெரிவித்துள்ளது. ஆகவே, அமெரிக்காவில்தான் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு இல்லை. ஆனால், இலங்கை ஒரு பாதுகாப்பான நாடு என்பதை உறுதியாகக் கூறுகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். பிரித்தானிய பிரஜையின் கொலை மிதமிஞ்சிய மதுபோதையில் தற்செயலாக நடைபெற்ற ஒரு துன்பியல் செயல். ஆனால், சுற்றுலாப் பயணியை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் இக் கொலை சம்பந்தமான வழக்கு இரண்டு வருடமாக நீடித்துச் செல்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால், இது தொடர்பாக நாம் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளோம். அவரும் இவ் வழக்கைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார். இவ் வழக்கு தற்போது கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக விரைவில் நீதி கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் விசேட அறிக்கை விரைவில்

## கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விவாதிப்பதற்கென அண்மையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்காமை உள்ளிட்ட பல விடயங்கள் அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் வெளியிடவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை அன்றைய தினம் கூட்டத்தில் நேரமின்மை காரணமாக வெளியிடப்படவில்லை என்றும் அவ்வறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு எண்ணியுள்ளதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்போது 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக விவாதிப்பதற்கென அண்மையில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அடுத்த வாரம் கூடிப் பேசுவதென்றும் அன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)





வலி. தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளும் பரிசளிப்பும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும் மாணவர்களின் உடற் பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: [illegible] செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலிய பிரதமர் கரிசனை

(கொழும்பு)

**இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்லும் அகதிகள் விடயத்தில் அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் கெவின் ரூட் தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார். அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமராக கெவின் ரூட் மீண்டும் பதவியேற்றுக் கொண்டபின் நடைபெற்ற முதலாவது செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இலங்கை அகதிகள் தொடர்பான தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.**

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான பிரச்சினை முக்கிய இடம் வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிலும் குறிப்பாக இந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பைக் கொண்டிருப்பதாக கருதப்படும் அவுஸ்திரேலியாவின் பழைமைவாத கட்சி, அகதிகள் விடயத்தில் கடுமையான போக்கை கொண்டுள்ளது.

சட்டவிரோதமாக வரும் குடியேற்றவாசிகளை இந்தோனேசியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் டோனி அபோட் தெரிவித்துள்ளார்.

எனினும் அவ்வாறு அனுப்புவது இந்தோனேசியாவுடன் பிணக்கை ஏற்படுத்தி விடும் என்று தெரிவித்துள்ள அவர்,

இந்த விவகாரம் குறித்து இந்தோனேசியாவுடன் கல



ந்துரையாடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அவுஸ்திரேலியா வரும் எந்தவொரு அகதியும் திருப்பி அனுப்பப்படப் போவதில்லை என்றும், அவர்கள் கௌரவமாக நடத்தப்படுவார்கள் என்பதாகவும் அவுஸ்திரேலியப் பிரதமரின் கருத்து அமைந்திருந்தது.

இதற்கிடையே இந்த ஆண்டின் தொடக்கம் முதல் இது வரை சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் படகுகளில் அவுஸ்திலேயாவை வந்தடைந்துள்ளனர். அவர்களில் பலர் இந்தோனேசியாவிலிருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதின் கீழ்ப் பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ள பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரைப் படத்தில் காணலாம்.

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரம் தெரிவித்துள்ளார்.

உத்தேச 19 ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால் நாட்டின் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்குமே தவிர வேறு நன்மைகள் ஏற்படப் போவதில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரப் பகிர்வினை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டங்களை நோக்கியே நகர வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடு சுபீட்சமடைய வேண்டுமாயின் நிரந்தரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமெனவும், அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலம் நன்மைகள் ஏற்படும் என எதிபார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவும் அதற்கு அப்பாலான காத்திரமான அதிகாரப் பகிர்வு பொறிமுறைமை ஒன்றை உருவாக்கவும் இலங்கை அசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்பதோடு, அதிகாரப் பகிர்வு அர்த்த முள்ள வகையில் அமைய வேண்டுமென தொடர்ச்சியாக வலியுறுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

## பல்கலைக்கழக அனுமதிக்காக 23 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

குறித்த விண்ணப்பப்படிவம் உள்ளிட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனைகள் அடங்கிய புத்தகம் நேற்று முதல விநியோகிக்கப்படுகின்றன.

இவ் விண்ணப்படிவங்களைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமோ அல்லது அதனால் தெரிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களிலோ பெற்றுக் கொள்ள முடியும்.

மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண் ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களை இவ்வாண்டு இறுதிக்குள் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தவறானவை

### ஜாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தவறானவை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மலேசிய பிரதமர் நாஜீப் ராஸாக் உடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தன்சானியாவிற்கு விஜயம் செய்துள்ள இரு நாட்டு ஜனாதிபதிகளும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது இரு தரப்பு விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மலேசிய பிரதமருக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நியாயமான மதீப்பீடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (2-5)

## பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடப்பது ஆபத்து

### டுபாய் ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தை ஏற்பது ஆபத்தானது என டுபாயில் இருந்து வெளிவரும் தி கல்ப் நியூஸ் தகவல் தெரிவித்துள்ளது.

மியன்மாரில் ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்புவதில் சர்வதேச நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், மற்றொரு ஆசிய நாடான இலங்கையில் ஜனநாயகம் அழிந்து போவது உலக நாடுகளின் கண்களுக்கு புலப்படவில்லை எனவும் இது ஆபத்தானது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கம் செய்த குற்றங்களைக் கண்டு கொள்ளாதது மாத்திரமின்றி, அவைகளுக்கு கைமாறு செய்யும் நிலைமையே காணப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியுள்ள இலங்கையில் இடம் பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட ஜனநாயக நாடுகள் புறக்கணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநாட்டிற்கு பின்னர், பொதுநலவாய அமைப்பின் தலைமைத்துவத்தை அடுத்த இரு ஆண்டுகளுக்கு இலங்கை பொறுப்பேற்கும் பட்சத்தில், உலக விவகாரங்களில் தலையீடு செய்யும் அதிகாரத்தை பொதுநலவாய அமைப்பு கொண்டுள்ளது என்ற கருத்து முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இலவச கணனி பயிற்சி சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி லிட்டில் ஏய்ட் இலவச கணனிப் பயிற்சி நிலையத்தின் 3 ஆவது அணிக்குரிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ஆங்கில வகுப்பு ஆரம்ப நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி, திருநகர் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திர குமார், சிறப்பு விருந்திணர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா, கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் க.முருகவேள், லிட்டில் ஏய்ட் பிரித்தானியாவின் அறக்கட்டளை உறுப்பிணர் த.ஜெயபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கரைச்சி-கிளிநெர்சசி பிரதேச செயலாளர் க.நாகேஸ்வரன், லிட்டில் ஏய்ட் பிரித்தானியாவின் அறக்கட்டளை உறுப்பினர் கொன்ஸ்டன்ரைன், லிட்டில் ஏய்ட் இலங்கை இணைப்பாளர் ஜோசப் விதானகே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

## ஜனாதிபதி மஹிந்த சீசெல்ஸிற்கு பயணம்

(கொழும்பு)

தன்சானியாவிற்கான விஜயத்திலிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து சீசெல்ஸிற்கான இரண்டு நாட்கள் சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மாலை சீசெல்ஸ் நோக்கி பயணித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்தவின் தன்சானியா விஜயத்தின் போது அரசியல், பொருளாதார, அபிவிருத்தி ஆகிய துறைகள் தொடர்பில் இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை இருநாடுகளுக்கிடையேயும் ஒப்பந்தங்கள் பல கைச்சாத்திடப்பட்டுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனதது ஆன்மீகப் பயணம்



## ஆன்மீகம் 48

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...இவைகளிலிருந்து மனதை தப்ப வைக்க தியானத்தைச் சரணடைந்தேன். என்னை மறந்து தியானத்தில் திளைத்துப் போனேன். காது செவிடாகும் பலத்த இடிச் சத்தம் என் சிறு தவத்தைக் கலைத்தது. கண்களைத் திறந்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. வானம் இருளத்துவங்கியது. அருகிலிருந்த பிரம்மரிஷி மலையிலிருந்து கருமேகங்கள் வானில் எழும்பின. திடீர் என்று சூறாவளிக் காற்று சுழன்று அடித்தது. புழுதி கிளம்பி மண்- கண்ணைத் தாக்கியது. பெருந்துளியாக வானம்நீரைத் தூவியது. பேரிரைச்சலுடன சற்று நேரத்தில் காற்று, இடி, மழை என்று இயற்கை சடராடியது. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். நான் நிஷ்டையில் அமர்ந்து பத்து நிமிடங்களில் இந்த அற்புதம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மழையில் நனைந்துகொண்டே ஓடி ஆச்சிரமத்திற்குள் புகுந்தேன்.

அதேநேரம் ஆச்சிரமத்தின் சப்பாடுகூட கொட்டகை காற்றின் வேகம் தாளாமல் தரையில் சாய்ந்தது. சற்று நேரத்தில் முழங்கால் அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இது கனவா? நனவா? சினிமாவைப் போல இவ்வளவு வேகமாக காட்சி மாற்றமா? ஆச்சிரமத்தின் உள்ளே எட்டிப் பார்த்தேன். சித்தர்பெருமான் கண்களை மூடி படுத்திருந்தார். அவர் முகத்தில் ஒரு சிறு புன்னகை மட்டும் நிலைத்திருந்தது.

மழை செயற்கையாக வரவழைக்க விமானம்மூலம் சென்று ரசாயன பொடி தூவி அந்த ரசாயன மாறுதலால் மேகத்தை குளிர வைத்து மழைபெய்ய வைக்க முடியும் என்று ஏராளமாக பொருள் செலவை அரசாங்கமே செய்து சாதிக்க முடியாததை இதோ கண்களை மூடி ஒன்றும் அறியாதவர்போல் முகத்தில் புன்னகை தவழ கண் மூடி படுத்திருக்கிறரே என் ஆசான். அவர் பத்து நிமிடங்களில் சாதித்து இருக்கிறாரே.

இவ்வளவு சக்தி படைத்த மகானை மக்கள் அறியாமல் இருக்கிறார்களே. இவரும் விளம்பரம் வேண்டாம் என்கிறாரே. என்ன செய்வது? மக்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று



மனதுக்குள் ஆதங்கப்பட்டவாறு மழையை ரசித்துப் பாத்துக்கொண்டிருந்தேன்.

அரை மணிநேரம் சக்கை போடு போட்ட பெருமழை ஓயத் துவங்கியது. குளிர் காற்று வீசியது. அப்போது என் பின்புறம் வந்துநின்ற சித்தர் பெருமான் என்ன ராஜா குளு குளுன்னு இருக்கிறதா? தண்ணீர் வேணுமில்ல இதோ வெள்ளமாய் போவுதே குடத்தில் பிடித்து வைத்துக்கொள். அந்தப் பிரச்சினையும் போய்விடும் என்றார் சிரித்துக்கொண்டே. நான் பதில் கூறத் தெரியாமல் மரம்போல் நின்றேன் சென்னை போகணுமா? என்றார் கேலியுடன்.

நாலரை அடி உயரம் கருத்த மேனி. எலும்புகள் நரம்புகளால் பின்னப்பட்டதைப் போன்ற உடல் அமைப்பு! இந்த சிறிய உருவத்திற்குள் இவ்வளவு அமானுஷ்ய சக்தி! அதை வெளிக்காட்டாத ஆடம்பரமில்லாத எளிய தோற்றம்.

அடக்கம், பொறுமை, கடின உழைப்பு, சத்தியத்தின் அவதாரம், இவரிடம் பஞ்ச பூதங்களும் அடிமையாக பணிபுரிகின்றன. ஆயினும், இவர் ஏன் ஒதுங்கி வாழ்கிறார்?

மக்களை ஏழைத் தொண்டர்களை நாட்டை வளப்படுத்தும் அரசியல்வாதிகளும் கூலிக்காக கொலை செய்யும் பாதகர்களும் கள்ள நோட்டு, கள்ளக்கடத்தல், களவு என வாழும் சட்டத்தின் பகைவர்களும் காசுக்காக தாய்நாட்டையே காட்டிக் கொடுத்து காசுபார்க்கும்தேசவிரோதிகளும் கள்ளக்கணக்கெழுதி கருப்புப் பணம் சேர்த்து நாட்டின் எதிர்காலத்தையே பள்ளத்தில் புதைக்கும் நாசகாரர்களும் உழைப்பவர் உதிரத்தில் உல்லாசமாக நீச்சலடிக்கும் பண முதலைகளும் மோசடிக்காரர்களும் காமவெறி கொண்டு அலையும் பெண்ணின் விரோதிகளும் தர்மம் மறந்தவர்களும் பெற்றோரை மறந்தவர்களும் உறவுகளை தாம் உயர்ந்தபோது உதறித் தள்ளிவர்களும் போலிகளும் மத வெறியர்களும் போலிச்சாமியர்களும் இப்படி இந்த பூமியையே நாசமாக்கிக் கொண்டிருக்கும் நாசகாரர்கள் வாழும் இப்பூமியில் துஷ்ட்டரைக் கண்டால் தூர ஒரு அடி என்பதுபோல் மற்ற மகரிஷிகளும் ஞானிகளும் சித்தர்களும் காலத்தின் கோலத்தால் மறைந்து வாழும் நிலையிலும் தாளமும் மறையாமல் ஒதுங்கி இருந்து உலகுக்கு தாம் பிறவி எடுத்த கடமையைச் செய்கிறார் என்ற விடைதான் எனக்குக் கிடைத்த சரியான விடையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தொடரும்

# யாழ்ப்பாணக் குடா நாட்டில் நன்னீரின் அளவு குறைந்து வருகிறது!

யாழ்ப்பாணக் குடா நாட்டில் 30 சதவீதமான நீரானது, உப்புநீராக மாறியுள்ளது. இந்நிலையில் 4500 ஹெக்ரெயருக்கும் மேற்பட்ட விவசாய நிலமானது தற்போது உவர்த் தன்மைாக மாறியுள்ளதால் இந்நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக்குடாநாடானது 1000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இங்கு ஆறுகள் காணப்படாததால் ஆண்டுதோறும் கிடைக்கும் சராசரி 1270 மி.மீற்றர் மழை வீழ்ச்சியிலேயே யாழ்ப்பாணக்குடா நாடு தங்கியுள்ளது. இந்த மழை வீழ்ச்சியானது ஒக்டோபர் தொடக்



கம் டிசம்பர் வரையான காலப்பகுதியில் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சியிலிருந்து பெறப்படும் 87 சதவீத மழைநீராகும்.


கடந்த காலத்தில் யாழ்க் குடாநாட்டில் வீட்டுத் தேவைகளுக்கான நீரானது கிணறுகளிலிருந்தும் விவசாயத்திற்கான நீரானது துலாமிதித்தல் மூலமும் பெறப்பட்டது. ஆனால், 1950 களிலிருந்து கிணற்று நீரானது நீர்ப்பம்பிகள் மூலம் இறைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணக்குடாநாட்டில் 100,000 வரையான கிணறுகள் காணப்படுகின்றன.

கடல்மட்டத்திலிருந்து உருவாகும் நீரூற்றானது சுண்ணாம்பு அடுக்குப் பாறைகளின் ஊடாக சுத்திகரிக்கப்பட்டு பயன்படுத்தக் கூடிய நன்னீராக மாற்றப்படும்போது இவ்வாறு நீர்ப்பம்பிகள் ஊடாக மேலதிக நீர் வெளிப்பாய்ச்சப்படுவதால் யாழ்க்குடாநாட்டு நீர், உப்பு நீராக மாறும் ஆபத்து தென்படுகிறது.

## தடுப்பது எப்படி...?

தற்போது யாழ்ப்பாணக் குடாநாட்டில் 30 சதவீதமான நீரானது உப்புநீராக மாறியுள்ளது. இந்நிலையில் 4500 ஹெக்ரெயருக்கும் மேற்பட்ட விவசாய நிலமானது தற்போது உவர்த்தன்மையாக மாறியுள்ளதாகவும் இதனால் விவசாய வல்லுனர்களின் அண்மையை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் வடமராட்சி கடல்நீரேரி, உப்பாறு கடல்நீரேரி ஆகிய இரு கடல் நீரேரிகள் காணப்படுகின்றன. இவை முறையே 77 மற்றும் 26 சதுரகிலோ மீற்றர் பரப் பளவைக் கொண்டுள்ளன. இந்தக் கடல்நீரேரிகளில் தேங்கும் நீரானது கடலுக்கு வழிந்தோடுவதுடன் உவர் நீராகவும் காணப்பட்டன. ஆனால், வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை பெய்யும்போது




கிடைக்கும் மழைநீர்கள் இந்த இரு நீரேரிகளிலும் தேக்கி வைக்கப்படுகின்றன. இவ்விரு கடல் நீரேரிகளிலும் தேக்கி வைக்கப்படும் நீரானது யாழ்க்குடாநாடு பெறும் மழைநீரின் 50 சத வீதமாகும்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் கிடைக்கப்பெறும் நன்னீரின் அளவை அதிகரிக்க வேண்டுமானால் நாங்கள் வேறு வழிகளை ஆராயவேண்டிய தேவையுள்ளது. குடாநாட்டின் தெற்கே உள்ள ஆனையிறவு கடல்நீரேரியானது 77 சதுர கிலோமீற்றர் பரப்பளவையுடையது. இது வன்னிப் பெருநிலப்பரப்பின் 940 சதுரகிலோமீற்றர் பரப்புக்கான நீர்த்தேவையை பூர்த்தி செய்கிறது.

பிரதானமாக கனகராஜன் ஆறு மற்றும் ஏனைய மூன்று சிறிய ஆறுகளிலிருந்து நீரைப்பெறுகிறது. வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் இந்த ஆறுகளுக்கு கிடைக்கப்பெறும் மேலதிக மழை நீரானது ஆனையிறவுக் கடல்நீரேரியைச் சென்றடைந்த பின்னர் இந்நன்னீரானது ஆனையிறவுக்கடல்நீரேரியின் கிழக்குப் புறத்தேயுள்ள சுண்டிக்குளம் மற்றும் மேற்கு முனையிலுள்ள ஆனையிறவுப் பாலம் ஆகியவற்றின் ஊடாக கடலை அடைவதால் நன்னீரானது விரயமாக்கப்படுகிறது. 1960களில் பரிந்துரைக்கப்பட்ட திட்டத்தில் ஆனையிறவுக் கடல் நீரேரியிலிருந்து விரயமாகும் பருவப்பெயர்ச்சி மூலம் கிடைக்கப்பெறும் நன்னீரானது யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற் காக பயன்படுத்தப்படும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திட்டத்திற்கான பிரதான முக்கிய குறிப்புகளும், இதற்காக 1960களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விபரங்களும் வருமாறு:-

✦ ஆனையிறவு கடல்நீரேரிக்கு மேற்கு முனையில் உள்ள ஆனையிறவு படகுத்துறையில் காணப்பட்ட வீதிகள் மற்றும் தொடருந்துப் பாலங்கள் என்பவற்றின் ஊடாக நன்னீர் வெளியேறி கடலுக்குள் செல்வதைத் தடுப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டது.

சண்டே லீடர்-
திரு.ஆறுமுகம்

தொடரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

502

## மரியாதையைக் கொடுக்கும் தொழில்



வைசாலி நகரத்தில் சோமகுப்தன் என்ற வணிகன் வசித்து வந்தான். குறுகிய காலத்தில் அதிக முதலீடு எதுவுமின்றி ஏராளமான பொருள் சம்பாதித்து கோடீஸ்வரனாக ஆசை கொண்டான். ஆனால், எத்தகைய தொழிலில் அவ்வாறு முதலீடே இல்லாமல் நிறையப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவன் யோசித்த வந்தான். ஒருநாள் நகரத்தில் ஒரு பெரிய செல்வந்தரின் வீட் டில் லட்சக்கணக்கானப் பணத்தை திருடர்கள் வீடு புகுந்து திருடிச் சென்றனர்.

திருட்டுத் தொழிலில் முதலீடு எதுவுமின்றி ஏராளமாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற உண்மை அவனுக்கு அப்போதுதான் விளங்கியது. உடனே அவன் தன்னுடைய வியாபாரத்தை விட்டுவிட்டு, திருட்டுத் தொழிலில் எவ்வாறு ஈடுபடுவது என்று யோசிக்கத் தொடங்கினான். சில நாட்களுக்குப் பிறகு நகர


**அம்புலிமாமா கதைகள்**

எல்லையில் உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் சில திருடர்கள் வசிக்கின்றனர் என்று தெரிந்து கொண்டு, அவர்களுடன் பரிச்சயம் செய்து கொள்ள இரவு நேரங்களில் அங்கு சென்று உறங்க ஆரம்பித்தான்.

திடீரென அந்நியன் ஒருவன் இரவு நேரங்களில் தங்கள் மறைவிடத்தில் தூங்குவது கண்ட திருடர்கள் சோமகுப்தனை ஒரு அநாதை என்றும், தமது திருட்டுத் தொழிலுக்கு அவனையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினர். ஒரு நாள் இரவில், திருடர்கள் இருவர் சாமான்கள் சுமக்கும் காவடிகள் கொண்டு வந்தனர். அவர்களில் குட்டையாக இருந்தவன் தூங்கிக் கொண்டிருந்த சோமனை எழுப்பி, "தம்பி! எங்களுடைய சகா ஒருவன் இன்று வரவில்லை. அவனுக்கு பதிலாக 'நீ எங்களுடன் திருட வருவாயா?" என்று கேட்டான்.

திருட்டுத் தொழிலில் அனுபவம் பெறுவதற்கான வாய்ப்பை எதிர் பார்த்துக்காத்திருந்த சோமன் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான். உடனே இரு திருடர்களும் சோமனை ஒரு விவசாயிபோல வேடம் தரிக்கச் செய்தனர். பிறகு அவன் தலையில் வெல்லம் அடங்கிய ஒரு மூட்டையை ஏற்றி, கையில் ஒரு கழியையும் கொடுத்தனர்.

திருட்டுத் தொழிலுக்கு இத்தனை ஒப்பனை தேவையா என்று சோமன் ஆச்சரியப்பட்டான். பிறகு அவர்கள் இருவரும் சோமனைத் தன்னுடன் அழைத்துச் சென்றனர். அவர்கள் நகரத்தின் பிரதானத் தெருக்களில் சென்றனர். செல்லும் வழியில் இருட்டில் படுத்திருந்த ஒரு நாயின்




வாலைத் தெரியாமல் சோமன் மிதித்து விட, நாய் பயங்கரமாகக் குரைத்தது. குரைப்பு சத்தத்தைக் கேட்டதுமே, சோமன் மிகவும் பயந்து போனான். அவன் தலையிலிருந்த மூட்டையிலிருந்து வெல்லம் தரையில் விழுந்து சிதற, அதை நாய் பாய்ந்து சென்று தின்னத் தொடங்கி, தான் குரைப்பதை நிறுத்தியது.

"தம்பி!நீ திருடப் போகிறாய் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு எச்சரிக்கையாக நடந்து செல்ல வேண்டும். இப்போது இந்த சத்தத்தைக் கேட்டு யாராவது காவலன் வந்தால் ஏதாவது உளறிவிடாதே! வாயை மூடிக் கொண்டிரு!" என்று உயரமான திருடன் எச்சரித்தான். அவன் சொல்லி முடிப்பதற்குள், அங்கு குதிரை மீது சவாரி செய்தவாறு ஒரு காவலன் தோன்றினான். அவர்களைக் கண்டதும், "யாரடா நீங்கள்? இந்த இரவு நேரத்தில் எதற்கு தெருக்களில் திரிந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று உறுமினான்.

அவனைக் கண்டதுமே சோமனின் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. பயத்தில் கை, கால்கள் நடுங்கின. உடனே, குட்டையான திருடன், "ஐயா! நாங்கள் பக்கத்து கிராமத்து வியாபாரிகள். வெல்லம் விற்பதற்காக நகரத்திற்கு வந்தோம். வியாபாரம் முடிந்து இரவு தங்குவதற்காக விடுதியை நோக்கிச் செல்லுகையில், வழி தவறிவிட்டோம். சத்திரத்திற்குச் செல்லும் வழியை தயவு செய்து காட்டுவீர்களா?" என்று அப்பாவி போல் நடித்தான்.

"ஓகோ! நீங்கள் கிராமத்து ஆசாமிகளா? பாவம்! நாள் முழுவதும் மூட்டையைத் தலையில் ஏற்றித் தெருத்தெருவாக அலைந்து களைத்து இருப்பீர்கள். அதிருக்கட்டும்! இப்படி நாள் முழுதும் உழைத்து, இவன் எப்படி தொந்தியும், தொப்பையுமாக இருக்கிறான்?" என்று சோமனைக் காட்டிக் கேட்டான். சோமனுக்கு பயத்தில் உயிரே போய் விடும் போலிருந்தது. தான் இன்று சிக்கிக் கொள்வோம் என்று நடுங் கினான்.

அதற்குள் உயரமான திருடன் சாமர்த்தியமாக, "ஐயா! நாங்கள் சகோதரர்கள். இவன் என் தம்பி பீமன்! சரியான சோம்பேறி! உழைக்காமல் உண்டு பெருச்சாளி போல் இருக்கின்றான். இன்று தான் முதன் முதலாக மூட்டை தூக்கி வியாபாரம் செய்ய வந்திருக்கிறான்!" என்றான். அதைக்கேட்டு பலமாகச்



சிரித்த காவலன், அவர்களுக்கு சத்திரம் செல்லும் வழியைக் காட்டி விட்டு, "சரி! நீங்கள் நேராக அங்கு சென்று விடுங்கள்! ஒரு மணி நேரம் சென்ற பின், நான் அங்கு வந்து நீங்கள் இருக்கிறீர்களா என்று சோதனை செய்வேன்!" என்று எச்சரித்து விட்டுக்கிளம்பினான்.

சோமனுக்குச் சென்ற உயிர் மீண்டது. ஆயினும், திருட்டுத் தொழில் மீது அக்கணமே வெறுப்பு ஏற்பட்டு விட்டது. "சே! ஒவ்வொரு நொடியும் பயப்பட வேண்டி இருக்கிறது. கண்டவரிடமெல்லாம் பொய் பேச வேண்டியிருக்கிறது. காவலர்கள் கையில் மட்டும் அகப்பட்டால், நம்மைப் பின்னி எடுத்துவிடுவார்கள். இப்படி பயந்து பயந்து அடி, உதை வாங்கிக்கொண்டு இந்தத் தொழிலை செய்ய வேண்டுமா? என்று அவனுக்குத் தோன்றியது.

மற்ற இருவரும் அவனை ஒரு மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அது ஒரு வைர வியாபாரியின் வீடு. சோமனை வாயிலில் காவலுக்கு நிறுத்தி விட்டு, அவர்கள் இருவரும் உள்ளே புகுந்தனர். உடனே, தப்பித்தோம், பிழைத்தோம் என்று சோமன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். சிறிது தூரம் சென்றதும், தான் விட்டு வந்த மாளிகை அருகே ஒரே கலவரமும், ஆரவாரமும் கேட்டு, திடுக்கிட்டுத் திரும்பினான்.

தன்னுடன் வந்த திருடர்களில் ஒருவன் மாட்டிக் கொண்டதையும், தப்பியோடும், மற்றவனை, காவலர்கள் துரத்துவதையும் கண்டு, இருட்டான ஒரு சந்தில் ஓடி ஒளிந்து கொண்டான். சற்று நேரத்தில், காவலர்கள் இரண்டு பேரையும் கைகளைக் கயிற்றினால் கட்டித் தெருவில் இழுத்துச் சென்றனர். "கடவுளே! இந்நேரம் நான் சிக்கியிருந்தால், என்னையும் அல்லவா சவுக்கால் அடித்து இழுத்துச் சென்றிருப்பார்கள் என்ன தவறு செய்ய இருந்தேன்! இனி, திருடுவதைப் பற்றி கனவில் கூட நினைக்கக் கூடாது!" என்று எண்ணியவாறு வீட்டை அடைந்தான்.

மறுநாள் அவன் மனைவி, "நேற்றிரவு, இரண்டு திருடர்களைக் காவலர்கள் துரத்திப் பிடித்து இழுத்துச் சென்றார்கள். தப்பித்து ஓட முயற்சித்த இருவரையும் காவலர்கள் கொன்று விட்டார்கள்! என்றாள். சோமன் மனத்திற்குள் கடவுளுக்கு நன்றி கூறிவிட்டு, கடவுளே! இனி, நான் அந்த மோசமான தெழிலைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்கமாட்டேன். கிடைத்தது போதும் என்று இப்போது செய்யும் வியாபாரத்தையே தொடர்ந்து செய்வேன்!" என்று பிரார்த்தனை செய்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒழிப்பு பணிகளை தட்டிக் கழிக்க முடியாது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

டெங்கு தடுப்பு நடவடிக்கையில் உள்ளூராட்சி சபைகள் தமது பொறுப்புக்களைத் தட்டிக் கழித்து விட முடியாது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டெங்கு தடுப்பு நடவடிக்கை தொடர்பான அமைச்சரவை உப குழுவின் அமர்வு அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

டெங்கு நோய் அதிகரிப்பு தொடர்பில் சுகாதார அமைச்சை நோக்கி நேரடியாக விரல் நீட்ட முடியாது. குப்பை கூழங்களை முறையாக அகற்றி பிரதேசங்களின் தூய்மை பேணப்பட்டால் டெங்கு பரவ முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மட்டத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை செயற்பாடுகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர் ஒருவருக்கு டெங்கு ஏற்படுமானால் அது ஏற்படக் காரணம் என்னவென்பது பற்றிய பொறுப்பை ஆசிரியர்கள் ஏற்க வேண்டும். அதற்கேற்ப பாடசாலைச் சுற்றாடல் சுத்தமாக பேணப்பட வேண்டும் எனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# 13 ஆவது அரசியல் அமைப்பில் மாற்றத்தை நிறைவேற்றிக் காட்டட்டும்

## ஐ.தே.க.சவால்

13 ஆவது அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யும் நடவடிக்கையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் நிறைவேற்றிக் காட்டட்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி சவால் விடுத்துள்ளது.

13 ஆவது அரசியல் அமைப்பில் மாற்றம் செய்வதன் மூலம் நாட்டில் இயல்பற்ற சூழ்நிலை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசியல் அமைப்பில் மாற்றம் கொண்டு வரும் அரசாங்கம் தேவையற்ற முயற்சி ஒன்றில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அமெ. பதில் துணை சட்டமா அதிபர் இலங்கையை பூர்வீகமாக கொண்டவர்

அமெரிக்காவின் பதில் துணைச் சட்டமா அதிபர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பதில் துணைச் சட்டமா அதிபராக மைதிலி ராமன் கடமையாற்றி வருகின்றார்.

உலக வங்கியின் நிதி கூட்டுத் தாபனத்தில் பணியாற்றி வரும் ஏ.தர்மரட்னத்தின் புதல்வியான மைதிலி ராமன் துணைச் சட்டமா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மைதிலி ராமன் இலங்கை வங்கியின் முன்னாள் பொதுமுகாமையாளர் சீ.லோகநாதனின் பேர்த்தி எனத் தெரிவிக்கப்படுகிறது.

மைதிலி ராமனின் பெற்றோர் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. அமெரிக்க நீதித்திணைக்களத்தின் குற்றவியல் பிரிவின் பதில்துணைச்சட்டமாஅதிபராகமைதிலி ராமன் நியமிக்கப்பட்டுள்ளார். (அ-2)

# தனியார் பேருந்து கட்டணத்தில் மாற்றமில்லை- கெமுனு விஜேரத்ன

(கொழும்பு)

தனியார் பேருந்து கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என தீர்மானித்துள்ளதாக தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பேருந்து உரிமையாளர் சங்கத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையையடுத்து ஜூலையில் இடம்பெறவிருந்த தனியார் பேருந்து கட்டண உயர்வு ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வருடாந்தம் ஜூலை மாதத்தில் தனியார் பேருந்து கட்டணங்களில் திருத்தம் ஏற்படுத்தப்படும். அந்த வகையில் இம்முறை ஜூலை மாதம் முதலாம் திகதி பேருந்து கட்டணத்தில் மாற்றம் ஏற்படுத்துவது தொடர்பில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் பல பேச்சு வார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் சி.பி.ரத் நாயக்க ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததன் படி பேருந்து கட்டண உயர்வில் பேருந்து உரிமையாளர்கள் ஒரு நிலைப்பாட்டுக்கு வரவில்லை என்பதே முக்கிய காரணமாகியிருந்தது.

இதற்கமைய அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளில் பேருந்து கட்டணத்தை அதிகரிப்பதில்லை என பேருந்து உரிமையாளர்கள் சங்கம் முடிவெடுப்பதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (அ-2)




❖1798 - நெப்போலியனின் படைகள் எகிப்தை அடைந்தன.

❖1825 -ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.

❖1851 - அவுஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூ சவுத் வேல்சில் இருந்து பிரிக்கப்பட்டது.

❖1862 - ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது.

❖1867 - பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம், 1867 கனடாவின் அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜோன் மாக்டொனால்ட் பிரதமராகப் பதவியேற்றார்.

❖1873-பிரின்ஸ் எட்வேர்ட் தீவு கனடா கூட்டமைப்பில் இணைந்தது.

❖1876 -சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.

❖1881 - உலகின் முதலாவது அனைத்துலக தொலைபேசித் தொடர்பு கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

❖1916 - முதலாம் உலகப் போர்: பிரான்சில் சொம் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் முதல் நாளில் 20ஆயிரம் பிரித்தானிய வீரர்கள் உயிரிழந்ததுடன், 40ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

❖1921 -சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பி க்கப்பட்டது.

❖1932 -ஏபிசி (அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.

❖1933 -சீனர்களின் குடியேற்றத்தை கனடா நாடாளும்மன்றம் தடை செய்தது.

❖1947 -இந்தியாவுக்கு முழு விடுதலையை ஒகஸ்ட் 15 ஆம் திகதி வழங்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிவெடுத்தது.

❖1960-இத்தாலியிடம் இருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.

❖1960 - கானா குடியரசானது.

❖1962 - ருவாண்டா விடுதலை அடைந்தது.

❖1962 - பெல்ஜியத்திடம் இருந்து புருண்டி விடுதலை அடைந்தது.

❖1967 - ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.

❖1970 - ஜனாதிபதி யாஹயா கான் மேற்கு பாகிஸ்தானில் மாகாணங்களை அமைத்தார்.

❖1976 - மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.

❖1978 - அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொதுநலவாயத்துக்கு கீழ் சுயாட்சி பெற்றது.

❖1979 - சோனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.

❖1990 - கிழக்கு ஜேர்மனி டொச் மார்க்கை தனது நாணய அலகாக ஏற்றுக் கொண்டது.

❖1991 - பிராக்கில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவில் வார்சா ஒப்பந்தம் அதிகார பூர்வமாக கலைக்கப்பட்டது.

❖1997 - மக்கள் சீனக் குடியரசு ஹொங்கொங்கில் தனது ஆட்சியை ஆரம்பித்தது. 156 ஆண்டு கால பிரித்தானிய குடியேற்ற ஆட்சி முடிவடைந்தது.

❖2002-சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.

❖2004 - காசினி யூஜென்ஸ் விண்கலம் சனிக் கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.

❖2006 - கொழும்பில் சுதந்திர ஊடகவியலாளர் சம்பத் லக்மால் சில்வா இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

❖1924 - தி. ச. வரதராசன், ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர் (இ. 2006)

❖1927 - சந்திரசேகர், 11ஆவது இந்தியப் பிரதமர்

❖1935-டி.ஜி.எஸ்.தினகரன், இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புநர்

❖1961 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (இ. 2003)

**❖1961 - டயானா, வேல்ஸ் இளவரசி (இ. 1997)**

❖1961 - கார்ல் லூயிஸ், அமெரிக்க ஓட்ட வீரர்

### இறப்புகள்

❖1965 - வால்ரர் ஹமொண்ட் - ஆங்கில துடுப்பாளர் (பி. 1903)

❖2001 - நிக்கலாய் பாசொவ், ரஷ்ய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1922)

❖1971 - வில்லியம் பிராக், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (பி. 1890)

### வேல்ஸ் இளவரசி டயானா



வேல்ஸ் இளவரசி டயானா 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி பிறந்தார். வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸின் முதலாவது மனைவி. இவர்களது பிள்ளைகள் இளவரசர்கள் வில்லியம், ஹென்றி (ஹரி) ஆகியோர். இவர்கள் பிரித்தானியாவின் முறையே இரண்டாவது, மூன்றாவது முடிக்குரியவர்கள் ஆவர்.

இளவரசர் சார்ள்ஸுடன் டயானா திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து டயானா பொது வாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார்.

ஐக்கிய இராச்சியத்தில் மட்டுமல்லாமல் உலகளாவிய அளவில் இவர்களது திருமண வாழ்வு தொடக்கம் மணமுறிவு ஏற்படும் வரையில் ஊடகத் துறையில் டயானா அதிகம் பேசப்பட்டார்.

பாரிசில் 1997 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31 இல் இவர் வீதி விபத்தொன்றில் உயிரிழந்ததை அடுத்து உலகெங்கும் இவருக்கு பெரும் அனுதாப அலைகள் பெருகத் தொடங்கின. நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்ட இவரது மரண விசாரணைகளின் இறுதி முடிவுகள் பதினொரு ஆண்டுகளுக்குப் பின்னர் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்டது.

[illegible] டயானாவின் தானுந்து ஓட்டுநர் வீதி சட்ட விதிகளை மீறியமையினாலும், [illegible]களினாலுமே விளைந்தது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய சுனாமி அல்ல தவறு அது...!

**உத்தரகாண்ட் மாநிலத்தில் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தின் மீட்புப் பணிதொடர்பான தற்போதைய தகவல்கள்:**
**இதுவரை ஒரு இலட்சத்து நான்காயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.**
**அனர்த்தத்துக்குப் பலியானோர் தொகை 842 பேர்கள் மட்டுமே என்று செய்திகள் தெரிவித்தாலும் அது, பல்லாயிரக்கணக்கில் இருக்கும் என்றே பெரும்பாலும் நம்பப்படுகிறது.**
**மத்திய மாநில பேரிடர் மீட்புப் படையினருடன் முப்படைகளைச் சேர்ந்த எட்டு ஆயிரம் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.**
**மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அணியின் ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் 20 இராணுவத்தினர் உயிர்ப்பலியாகியுள்ளனர்.**
**மிகவும் சிரமமான சூழ்நிலையிலும், சம்பந்தப்பட்ட அதிகாரரிகளிடமிருந்து எந்த ஒரு உத்தரவுக்கும் காத்திராமல், மீட்புப் பணியில் ஈடுபடும்படி தனது படைகளுக்கு உத்தரவு இட்டிருப்பதாகவும், அவர்கள், தமது குடும்பத்தினரைக் கவனிப்பதற்கு விடுமுறை எடுக்காமல் மீட்புப் பணியில் ஈடுபட்டுவருகிறார்கள் என்றும் தெரிவித்த, இந்திய தலைமை இராணுவத் தளபதி விக்ரம் சிங், அனர்த்தத்தில் சிக்கிய கடைசி நபர் மீட்கப்படும் வரை இராணுவத்தினரின் மீட்புப்பணி தொடரும் என்று அறிவித்திருக்கிறார்.**
**மீட்புப்பணியின் போது, தமது உயிர்களைத் தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்துவதாகவும் அவர், ஊடகங்களுக்கான செவ்வியில் அறிவித்துள்ளார்.**



உத்தரக்காண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட விபரீதத்திற்கு இமாலய சுனாமி என்று பெயர் வைத்துள்ளார்கள். இப்பெயரை வைத்தவர் அதி கெட்டிக்காரராக இருக்கவேண்டும். ஏனெனில் இப்பெயரானது, இப்பொழுது நிகழ்ந்துள்ள துயரம் சுனாமியைப்போல தடுக்க முடியாத இயற்கை விபரீதம் என்கிற கருத்தை அது தருகிறது; அத்தனை துயரங்களுக்கும் இயற்கை மீது பழி போடுகிறது. இது கொஞ்சமும் உண்மயல்ல.

அறிவியல்பூர்மாக ஆராயின் உண்மை புலப்படும். அதாவது, 50 அல்லது 60 ஆண்டுகளுக்கும் மேலாக, நடந்து வந்துள்ள காடழிப்பு, 90 சதவீதத்திற்கும் மேலாக, மலைப்பிரதேசமாக உள்ள உத்தரக்காண்டில் ஏற்பட்டு வருகிற நிலச்சரிவு, நில அரிப்பு போன்ற ஆபத்துக்ளைக், கண்டு கொள்ளாமை, ஆண்டுதோறும் உத்தரக்காண்டில் உள்ள யாத்திரைத் தலங்களுக்கு வருகின்ற ஆயிரக்கணக்கான பயணிகளின் பாதுகாப்பு பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளாமை, பெருமழை, வெள்ளம் அகியவை பற்றி முன்னெச்சரிக்கை அளிக்கத் தகுந்த ஏற்பாடு இல்லாமை போன்று தொடர்ந்து இருந்து வந்துள்ள பல காரணங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இமாலயத் தவறு என்று சொல்கிற அளவுக்கு உருவெடுத்ததன் விளைவாகத்தான் இப்போதைய நிலைமை ஏற்பட்டுள்ளது எனலாம்.

எனவே, இமாலயத் தவறை இமாலய சுனாமி என்ற வருணனை மூலம் மூடி மறைக்க முடியாது.

மழைவெள்ளத்தால், மலைச்சாலைகளில் வழி நெடுக உடைப்பு ஏற்பட்டு 80 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரையிலான மக்கள் ஊர் திரும்ப வழியின்றி மலைகளில் ஆங்காங்கே சோறு, தண்ணீர் இன்றிக் குளிரில் தவித்தனர் பலர் உயிாப்பலியாகினர் என்பதுதான் உத்தரகாண்ட மாநிலாத்தில் ஏற்பட்ட பிரதான பிரச்சினையாகும்.

இவர்களை மீட்க பெரும்பாடுபட வேண்டியிருந்தது. உத்தரகாண்டில் மலைப் பிரதேசங்களில் பத்ரிநாத், கேதாநாத், கங்கோத்ரி, யமுனாத்ரி எனப் பல புனிதத்த் தலங்கள் உள்ளன. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆண்டுதோறும் பக்தர்கள் குறிப்பிட்ட பருவத்தில், தங்கள் சொந்தப் பொறுப்பில் துணிந்து மலைக் காடுகள் வழியே நடந்தே (பாத யாத்திரை) சென்று வந்தனர்.

பின்னர், மலைச்சரிவுகளில் பாதைகள் போடப்பட்டன. இப்போது இவர்களை அழைத்துச் செல்ல பஸ் சேவைகள் உள்ளன. பஸ்களை அமர்த்திக்கொண்டு செல்பவர்களும் உண்டு. கோஷ்டியாக வாகனங்களில் செல்பவர்களும் உண்டு. சொந்தக்கார்களில் செல்பவர்களும் உண்டு. சொந்தக் கார்களில் அல்லது வாடகைக் கார்களில் செல்பவர்கள் பலர். இப்படியாகச் செல்பவர்களை அவர்கள் சொந்தப் பொறுப்பில் செல்வதாகச் சொல்ல முடியாது. ஆயிரமாயிரம் பக்தர்களின் வருகையானது பெரிய சுற்றுலாத் தொழிலாக மாறிவிட்டது. இவர்களுக்கு வழி நெடுக தேநீர், கோப்பி விற்பவர்கள், ஊதுவத்தி விற்பவர்கள், பலகாரம் விற்பவர்கள் என உள்ளுர்வாசிகளான பல ஆயிரம் பேருக்கு வருமானம் கிடைக்கிறது. இவர்கள், அனைவரின் பாதுகாப்பு விடயத்தில் மாநில அரசுக்குப் பொறுப்பு உள்ளது.

இதுவரை இல்லாத பெருமழை பெய்ததுதான் விபரீதத்திற்கான காரணம் என்கிறார்கள். அப்படி ஒன்றுமில்லை. இதற்கு முன்னரும் இதே அளவுக்கு மழை பெய்துள்ளது. ஆனால், அப்போது யாத்திரைப் பருவம் இல்லை என்பதால் பிரச்சினை இப்போதைப் போல விசுவரூபம் எடுக்கவில்லை.

வானிலைத் துறையினர் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருந்தால், யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பஸ், கார் போன்றவை மேலே சென்றிராது. யாத்திரிகர்கள் மேலே சிக்கிக் கொள்கின்ற பிரச்சினை தவிர்க்கப்பட்டிருக்கும். வானிலைத் துறையினரோ எச்சரிக்கை கொடுக்கப்பட்டதுபோல மழுப்புகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் விபரீதம் நிகழ்ந்த பிறகு, அதே வானிலைத்துறையினர் எங்கெல்லாம் அதிக மழை பொழியும் என்று விவரமாக அறிக்கை விடுத்தனர்.

உத்திரக்காண்ட்டில் கடந்த பல ஆண்டுகளில் ஏராளமான அளவுக்குக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அப்படியான நிலையில் நிலச்சரிவும் நில அரிப்பும் அதிகமாகத் தான் இருக்க முடியும்.

மலைகளில் காடுகள் இருந்தால் நல்ல மழை பொழியும் என்பார்கள். அதே சமயம் அந்தக் காடுகள்தான் மழை வெள்ள ஆபத்தைக் குறைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மலைப் பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகள் மழைநீரின் கணிசமான பகுதியை தம்மிடம் இருத்தி வைத்துக் கொள்கின்றன; வெள்ள ஆபத்தையும் குறைக்கின்றன; நில அரிப்பைக் குறைக்கின்றன. தாவரமே இல்லாமல் வெறும் மண்ணாக இருக்கின்ற மலைச் சரிவில் மழை பெய்யுமானால், பெரிய மழைத்துளிகள் மண்ணைக் கரைத்துக் கொண்டு கீழ் நோக்கி வெள்ளமாக, வேகமாகப் பாயும்.

அதே மலைச் சரிவில் அடர்ந்த காடுகள் உள்ளதாக வைத்துக் கொள்வோம்; மிக உயர்ந்த மரங்களின் இலைகள் மீது மழைத் துளிகள் விழும்போது, மழைத்துளிகளின் வேகம் குறைக்கப்படுகின்றது. இலைகள் மீது விழும் துளிகள் வேகம் குறைந்தவையாக கீழே உள்ள கிளைகளின் இலைகள்மீது விழும். பெரிய மழைத்துளிகள் பல சிறு துளிகளாகவே கீழே தரையில் விழும். காடுகளில் தரை முழுவதிலும் குப்பைகள் நிறைய இருக்கும். மரங்களின் இலைகள் வழியாகக் கீழே வந்து விழும் மழைத் தண்ணீரை வேகமாக ஓட விடாமல் இலைக் குப்பைகள் தடுக்கின்றன. இதன் விளைவாக மழை நீரானது, மெதுவாக மண்ணுக்குள் இறங்க வழி ஏற்படுகிறது.

இப்படி உள்ளே இறங்கும் நீரானது, பாறை இடுக்குகளில் போய் தங்க,வழி ஏற்படுகிறது. இதன் விளைவாகப் பின்னர் மலைகளில் சுனையாக அமைகிறது.

மலைச்சரிவில் காடுகள் இருக்குமானால், மரங்கள், செடி, கொடிகள் ஆகியவற்றின் இலைகளில் கணிசமான நீரைத் தேக்கி வைத்துக் கொள்கின்றன. அதேபோலவே தாவரங்களின் வேர்களும் நீரை ஈர்த்து வைத்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இந்த வேர்கள் மண்ணைக் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொள்பவை. மலைச் சரிவுகளில் உள்ள தாவரங்களின் வேர்கள் நிலச்சரிவு, மண்ணரிப்பு ஏற்படாமல் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மரங்களின் பெரிய வேர்களிலிருந்து சல்லிவேர்கள்வரை எண்ணற்ற வேர்கள் மண்ணை ஊடுருவியிருக்கின்றன. கொங்ரீற்றினுள் உள்ள கம்பிகள் கொங்கிரீட்டை பற்றிப் பிடித்து வைத்திருப்பது போன்று, இவ்வேர்கள், மண்ணைப் பிடித்து வைத்திருக்கின்றன. இந்த வேர்களே நிலச்சரிவு, மண்ணரிப்பு ஆகியவை நேராமல் தடுக்கின்றன. ஆனால், பெரிய அளவில் காடுகள் அழிக்கப்பட்டால், மண் அரிப்பின் விளைவாக ஆறுகள் சாலைகளைக் குறுக்கறுத்துப் பாயும்; நிலச்சரிவு அதைவிட மோசமாக மரங்கள் கட்டங்கைளை பொறித்து வீழ்த்துகிறது. இதன் விளைவாகவும் சாலைகள் துண்டிக்கப்படுகின்றன. உத்தரக்காண்டிலும் இதுவே நடந்தது.

உத்தரக்காண்ட் மாநிலத்தில் அடுக்கடுக்கான மலைகள் உள்ளன. இவற்றின் நடுவே அமைந்த பள்ளத்தாக்குகளில் பல சிறு நதிகள் ஓடுகின்றன. அண்மையில் பெய்த மழையின்போது இவற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. நதிக்கரையில் அமைந்த வீடுகள், பல மாடிக்கட்டடங்கள், வாகனங்கள் ஆகியவை சரிந்து நதியில் விழுந்ததை காணொலிகள் மூலமாகக் காணமுடிந்தது. மண்ணரிப்பு எவ்வளவு பயங்கரமானது என்பதை இவை புரியவைத்ததுடன் நில ஆக்கிரமிப்பு எந்த அளவுக்கு உள்ளது என்பதையும் இவை காட்டின.

இதுபோன்ற மலைகள் நிறைந்த மாநிலங்களில், இத்தகைய இயற்கை அனர்த்தங்களைத் தவிர்க்க எவ்வித நடவடிக்கைகள் தேவை என்பது குறித்து, நிபுணர்கள் கடந்த பல ஆண்டுகளில் அவ்வப்போது அறிக்கைகளை அளித்துள்ளனர். ஆனால், அரசுகள் இவற்றைத் தொடர்ந்து புறக்கணித்து வந்துள்ளன. இது பேதாதென்று இம் மாநிலத்தில் சுரங்க வேலைத்திட்டங்கள், அணைகளைக் கட்டி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நீர் மின்சாரத் திட்டங்கள் என பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடர்ந்த காடுகளை அழிக்க இவை வகை செய்கின்றன. எனவே, பேரனர்த்தங்கள் உருவாதலுக்கு அதிகாரிகளின் தவறுகளே முதன்மையான காரணம்.



தொகுப்பு சாருகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தொடர்ந்தும் இராணுவ உதவிகளை வழங்க தயாராகவுள்ளோம்

## பாகிஸ்தான் இராணுவ தளபதி வாக்குறுதி

(கொழும்பு)

**கடந்த காலங்களைப் போன்று இலங்கைக்கு பாகிஸ்தான் தனது ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்கும் என்று பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வேஷ் கயானி தெரிவித்துள்ளார். தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக் கொண்டு இரண்டாம் லெப்டினன்ட்களாக வெளியேறிய 64 இராணுவ அதிகாரிகளின் பிரியா விடை மற்றும் மரியாதை அணி வகுப்பு வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றது.**



இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை மற்றும் பாகிஸ்தான் இராணுவத்திற்கு இடையிலான உறவுகள் மிகவும் பழைமை வாய்ந்தவை.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் சிறந்த முறையில் பேணப்பட்டு வருகின்ற நிலையில் பாகிஸ்தான் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பை தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கும்.

இலங்கையைப் போன்று பாகிஸ்தானும் என்றும் சமாதானத்தை விரும்பும் நாடு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக இடம்பெற்ற யுத்தத்தை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இராணுவத்தினரால் வெற்றி கொள்ள முடிந்தது.

யுத்தத்தின் போது பாகிஸ்தான் இராணுவ மற்றும் அறிவு ரீதியான ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியதாக தெரிவித்த அவர்,

இந்த இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் எதிர்காலத்தில் பாகிஸ்தான் தொடர்ந்தும் வழங்கும் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

இலங்கை மற்றும் பாகிஸ்தானும் பிராந்திய நாடுகளைப் போன்று உள்ளூர் மட்டத்தில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு முகம்கொடுக்கும் பொறுப்பு இன்று பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறும் இளம் அதிகாரிகளுக்கு உண்டு.

வெளியேறும் அதிகாரிகளின் பயிற்சிகளையும் மரியாதை அணிவகுப்பையும் பார்க்கும் போது அது சர்வதேச தரத்திற்கு அமைய உள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

எனவேதான் தியத்தலாவை இராணுவ பயிற்சி அக்கடமி சர்வதேச மட்டத்தில் சிறந்த பெயரை பெற்றுள்ளது.

இலங்கையில் தற்பொழுது சமாதான சூழல் நிலவுகின்ற நிலையில் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கு இராணுவம் ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (அ-2)

# இந்திய மீனவர்கள் நால்வரை காப்பாற்றியது கடற்படை

தலைமன்னார் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் நால்வரை இலங்கை கடற்படையினர் காப்பாற்றியுள்ளனர்.

தலைமன்னாருக்கு சுமார் 10 கடல் மைல் தொலைவில் இவர்கள் பயணித்த படகு இயந்திர கோளாறு ஏற்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக கடற்படை பதில் பேச்சாளர் லெப்டினன் கொமாண்டர் ஜானக்க குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் படகில் இருந்த மீனவர்கள் நால்வர் காப்பாற்றப்பட்டுள்ளனர். இயந்திர கோளாறு ஏற்பட்ட படகு தற்போது தலைமன்னார் துறை முகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

காப்பாற்றப்பட்ட இந்திய மீனவர்கள் தமது பாதுகாப்பில் இருப்பதாகவும் இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவித்துள்ளதாகவும் கடற்படை பதில் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஈழத்தமிழர் விவகாரத்தில் இணக்கப்பாடு கிடையாது

## கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளத் தயாரில்லை என தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலில் போட்டியிடும் போது கூட்டணி வைத்துக் கொள்வதற்காக இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது. 13 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய இலங்கை அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

எனினும் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கவுள்ளோம். இலங்கைத் தமிழர் விவகாரமும் பொதுத் தேர்தலும் இரண்டு வேறுபட்ட விடயங்கள். அவை இரண்டையும் ஒன்றாக்கி குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார். (அ-5)

# ஊடகங்கள் சரியான முறையில் செய்திகளை வழங்க வேண்டும்

## சட்டமா அதிபர் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் பொறுப்புடனும் முனைப்புடனும் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும். அழிவுக்கு வழிவகுக்காமல் அவர்கள் பணிகள் ஆக்கத்துக்கு உரியதாக அமைய வேண்டும்.

மேலும் சரியான முறையில் செய்திகளை வழங்கி மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மொழி, சமூகம், மதம் என்ற வேறுபாடுகளைக் களைந்து நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் தேசிய ஒற்றுமைக்கும் மத ஒற்றுமைக்கும் நாட்டின் மேம்பாட்டுக்கும் நாம் பாடுபட வேண்டும்.

நாம் மும்மொழிகளையும் கற்க வேண்டும். மொழிகளை நாம் கற்காமையால் தான் பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம்.

ஊடகவியலாளர்களின் பணி உயரியது, உத்தமமானது. அவர்கள் தமது பணிகளை நாட்டின் நன்மைக்குப் பயன்படுத்த வேண்டும்.

பேனாவில் இருந்து எழுத்து வெளிப்பட்டு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டால் அது முக்கியம் பெற்று விடுகிறது. அதன் தாக்கங்கள் பலவகைப்பட்டதாக அமையும். நன்மைகளும் விளையலாம், அழிவுகளுக்கும் வழி கோலலாம்.

எனவே, ஊடகவியலாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிசெய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீசாலை சீமா இளைஞர் கழக அங்கத்தவர் ஒருவரின் குடும்பத்திற்கு வீடொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வீட்டைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா நாடாவெட்டி வீட்டை திறந்து வைப்பதையும் பயனாளிகள் மற்றும் மன்ற அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- தனங்கிளப்பு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு எதிராக திரும்புகிறது 13 ஆவது திருத்த சட்டமூலம்

## இந்தியா தடுத்து நிறுத்த வேண்டும்- கருணாநிதி அறிக்கை

(சென்னை)

**இந்தியா- இலங்கை ஒப்பந்தத்தை மீறி தமிழர்களுக்கு எதிரான 13ஆம் சட்டதிருத்தத்தில் இலங்கை தன்னிச்சையாக மாற்றங்கள் செய்யுமாயின் அது உலக அரங்கில் இந்தியாவுக்குத்தான் பெரும் தலைகுனிவாகிவிடும் என்று கருணாநிதி கூறியுள்ளார்.**

தி .மு. க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

தி. மு. கவின் மாநிலங்களவை வேட்பாளருக்கு முதலில் கம்யூனிஸ்ட் கட்சிகளிடமும் பின்னர் தே.மு.க. விடமும் மனித நேய மக்கள் கட்சியிடமும் புதிய தமிழக கட்சியிடமும் அதன் பின்னர் காங்கிரஸ் கட்சியிடமும் ஆதரவு கேட்டது தான் உண்மை. இதில் எந்தக் கட்சியிடமும் எந்த விதமான நிபந்தனையும் இல்லாது இந்தத் தேர்தலையொட்டி மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.


ஆனால், கடந்த சில மாதங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியோடு உடன்பாட்டை முறித்து கொண்ட தி.மு.க. தற்போது மீண்டும் காங்கிரஸ் கட்சியோடு உறவு கொண்டு விட்டது. இலங்கைப் பிரச்சினையை கைகழுவிவிட்டது என்றெல்லாம் ஆரம்பத்திலிருந்தே தி.மு.க. மீது பகையுணர்ச்சியோடு வெறுப்பு அரசியல் நடத்தி வரும் ஒரு சிலர் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்கள். இலங்கை தமிழர் விவகாரத்தில் அந்த நாட்டு அரசு 13 ஆவது சட்ட திருத்தம் செய்து அதன் அடிப்படையிலேயே நீர்த்துப் போகச் செய்து அதனை உயிரற்ற ஒன்றாக ஆக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதை நாம் மனதில் கொள்ள வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையை மனதில் கொண்டுதான் 09.06.2013 இல் பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருந்தேன். பிரதமர் மன்மோகன்சிங் தன் பதிலில் இலங்கை வாழ் தமிழர்கள் உட்பட அங்குள்ள அனைத்துச் தரப்பினரும் தங்களுக்குரிய உரிமைகளைப் பெற்று நல்லிணக்கத்தோடு வாழ வேண்டுமென்ற கருத்தில் இந்திய அரசு செயற்பட்டு வருகிறது என்று பதில் எழுதியிருந்தார்.

இந்திய அரசின் சார்பில் இலங்கை அரசுக்குக் கடிதம் எழுதிய போதும் அது எந்தவிதமான தாக்கத்தையோ அல்லது நிர்ப்பந்தத்தையோ இலங்கை அரசுக்கு ஏற்படுத்துமா என்று தெரியவில்லை.

13 ஆவது சட்ட திருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து ஆலோசனை செய்ய நாடாளுமன்றத் தேர்வுக் குழு அமைத்தார்கள். இது 2 நாடுகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறுகின்ற செயலாகத்தான் இருக்கும். இந்தியாவும் இலங்கையும் இணைந்து ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் உட்பிரிவுகளில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால் இந்தியாவின் ஒப்புதல் பெறாமல் இத்தகைய திருத்தம் செய்வது எந்தவிதத்திலும் நியாயமில்லை.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை மீறி தமிழர்களுக்கு எதிராக 13 ஆவது சட்ட திருத்தத்தில் இலங்கை தன்னிச்சையாக மாற்றங்கள் செய்தால் அது உலக அரங்கில் இந்தியாவுக்குத்தான் பெருத்த தலைகுனிவாகிவிடும். 1987 ஆம் ஆண்டு இந்தியா- இலங்கைக்கிடையே இலங்கையின் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வு செய்யும் ஒப்பந்தம் நிறைவேறியது. இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் தற்போது இலங்கை அரசு 13 ஏ.வில் திருத்தம் கொண்டு வருகிறது. இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதற்கட்டமாக ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றிட கடும் அழுத்தத்தை வழங்க வேண்டும் என்றுதான் தி.மு.க. இப்போதும் வலியுறுத்துகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



# சிரியாவில் இரு கிறிஸ்தவர்கள் தலை துண்டித்து படுகொலை

சிரியாவினுள் அமெரிக்கா ஆயுதங்களைக் கொண்டு வருவதற்கு உதவிய இரு கிறிஸ்தவர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பசீர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக மக்கள் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களில் பலர் ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். ஆயுதப் போராளிகளை நசுக்கி வீழ்த்த பசீர் அல் ஆசாத் இராணுவத்தை ஏவி விட்டுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையே நடக்கும் மோதல்களில் இதுவரை ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

ஆசாத்திற்கு எதிராக போராடி வரும் குழுக்களுக்கு அமெரிக்காவின் உளவுத் துறையான சி.ஐ.ஏ. ஆயுத உதவி செய்து வருவதாக சிரிய அரசு குற்றம் சாட்டி வருகின்றது.

இதனை ஒப்புக் கொண்டுள்ள அமெரிக்கா வெளிப்படையாகவே ஆயுத உதவிகளை வழங்கத் தயாராகவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஆயுதங்கள் இன்னும் 2 அல்லது 3 வாரங்களில் சிரியா வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் சிரியாவுக்குள் அமெரிக்கா ஆயுதங்களைக் கொண்டு வர உதவிய கிறிஸ்தவ பாதிரியார் மற்றும் ஒரு கிறிஸ்தவரின் தலைகளைத் துண்டித்த காட்சி தற்போது இணையத்தில் உலா வரத் தொடங்கியுள்ளது.

கைகள் கட்டப்பட்ட நிலையில் இட்லிப் என்ற இடத்தில் ஏராளமான பொதுமக்களின் முன்னிலையில் ஆசாத்தின் ஆதரவாளர்கள் இவர்களின் தலைகளைத் துண்டிக்கும் காட்சி வீடியோவில் பதிவாகியுள்ளது.

துண்டித்த தலைகளை உடலில் இருந்து பிரித்தும் பின்னர் உடலுடன் பொருத்தியும் அவர்கள் செய்யும் வேடிக்கைகளை ஏராளமான பொதுமக்கள் கைதட்டி ரசித்து உற்சாக கூச்சலிடுவதும் வீடியோவில் பதிவாகியுள்ளது.

(அ-2)

# மண்டேலாவை புகழ்கிறார் ஒபாமா

தென்ஆபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா முழு உலகத்திற்குமே முன்னுதாரணமாக திகழ்கின்றார் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஜொஹனர்ஸ் பேர்க் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கொள்கைகளை முன்னெடுப்பதில் மண்டேலா காட்டிய ஸ்திரத்தன்மை அனைவருக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது.

மக்களின் உரிமைகளுக்கே மண்டேலா தொடர்ந்து குரல் கொடுத்துள்ளார்.

இதேவேளை, இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பராக் ஒபாமா மண்டேலாவின் குடும்பத்தாரை சந்தித்து பேசியுள்ளார். மண்டேலாவின் மனைவியுடன் தொலைபேசி ஊடாக ஒபாமாவும் அவரது மனைவியும் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## நன்மதிப்புள்ள நாடாக கனடா தெரிவு

உலகிலேயே மிகச்சிறந்த நன்மதிப்புள்ள நடாக கனடா தெரிவாகியுள்ளது.

தற்போது நடைபெற்ற புதிய வாக்களிப்பின்படியே கனடா தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் மதிப்பு, நாட்டைப் பற்றிய நன்மதிப்பு, பிரமிப்பு, நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒரு நாட்டை நன்மதிப்புள்ள நாடாக தெரிவு செய்வார்கள்.


இதன் அடிப்படையில் ஜி 8 நாடுகளைச் சேர்ந்த 27ஆயிரம் மக்கள் 50 நாடுகளைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை வாக்கெடுப்பில் தெரிவிக்க வேண்டும்.

மேலும் அம்மக்களிடம் 16 கேள்விகள் கேட்கப்படும் அவற்றில் ஆற்றல் வாய்ந்த அரசாங்கம் , கவர்ச்சியான சுற்றுச்சூழல் ,பொருளாதார முன்னேற்றம் ஆகியவையே முக்கியமானதாக கருதப்படும்.

இவற்றின் முடிவுகளிலிருந்து கனடா 100இற்கு 76.6 மதிப்பீடும், சுவீடன் 100இற்கு 76.5 மதிப்பிடும், சுவிட்சர்லாந்து 76.3 மதிப்பீடும், அவுஸ்திரேலியா 76.1 மதிப்பீடும், நோர்வே 74.1 மதிப்பீடும் பெற்றுள்ளன.

இம்மதிப்பீட்டின்படி கனடா முதலாவது இடத்தை பிடித்திருக்கின்றது. கடைசியிலிருந்து ரஷ்யா 36.7, நைஜீரியா 34.0, பாகிஸ்தான் 28.8, ஈரான் 22.6, ஈராக் 21.2, யுனைடெட் ஸ்டேட்ஸ் 22. மதிப்பீட்டை பெற்றிருக்கின்றன. (அ-2)

## ஆப்கானில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் பிரிட்டன் பிரதமர் பேச்சு



முன்னறிவிப்பு ஏதுமின்றி டேவிட் கமரூன் ஆப்கானிஸ்தானிற்கு திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஆப்கான் அரசிற்கும் தலிபான்களுக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்துவரும் நிலையில் ஆப்கானிதான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயைச் சந்தித்து கலந்துரையாடிய டேவிட கமரூன் அங்கிருந்து நேராக நேற்று முன்தினம் பாகிஸ்தான வந்து சேர்ந்தார்.பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை நேற்று முன்தினம் இரவு சந்தித்த டேவிட் கமரூன், ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக அவருடன் ஆலோசனை நடத்தினார். இரண்டு நாட்கள் பாகிஸ்தானில் தங்கி இருந்து பிரதமர் நவாஸ் ஷெரிப் மற்றும் பாகிஸ்தானில் உள்ள முக்கிய கட்சித் தலைவர்களுடன் டேவிட் கமரூன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்சாரம் இன்றி

# இருளில் மூழ்கும் குமுழமுனை கிராமம்



(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை பிரதேசம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

குமுழமுனைப் பிரதேசத்தில் கிழக்கு, மத்தி, மேற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளிலும் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பிரதேச மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேறப்பட்டுள்ளபோதும் இதுவரை மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

ஆயினும் இக்கிராமம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே இங்கு மின்சாரம் இல்லை என்பது சுட்டிக் காட்டத்தக்கது.

முல்லை.மாவட்டத்திலே அதிக நெல் விளைச்சலை கொண்டுள்ள பகுதியாக குமுழமுனை காணப்படுவதனால் அரிசி உற்பத்தியில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையிலும் தமது பிரதேசத்திற்கு மின்சாரத்தை வழங்க முல்லை. அரசாங்க அதிபர் முன் வராமல் இருப்பது ஏன் என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.


முல்லைத்தீவின் பிரதான வீதியால் செல்கின்ற மின்னிணைப்பு மூலம் குமுழமுனைப் பகுதிக்கு அலம்பில் வீதி தங்கபுரம் ஊடாக மூன்று கிலோமீற்றர் தூர இடைவெளியில் பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே, இலங்கை மின்சார சபையின் முல்லைத்தீவு கிளையினர் இதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ள முன்வர வேண்டும் என மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் மூன்று பாடசாலைகளும் 6 இற்கும் மேற்பட்ட அரச திணைக்களங்களும் பால், ஜோக்கட் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் என்பன இயங்கி வருகின்றன. இவை மின்சாரம் இன்மையால் பல இன்னல்களின் மத்தியிலேயே பணிகளை முன்னெடுத்து வருகின்றன.

அது மட்டுமன்றி இங்குள்ள பாடசாலைகளிலுள்ள கணனிகள் மின்சாரமின்மையால் செயற்படாது உள்ளதால் கல்வி பயிலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குமுழமுனைக் கிராமத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் இலங்கை மின்சார சபையினர் இதனைக் கவனத்திலெடுத்து தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். (ம-267)



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வலயமும் இராணுவத் தலைமையகமும் இணைந்து வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கு புலமைப் பரிசு வழங்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மாணவனொருவருக்கு காசோலை வழங்கி வைப்பதையும் அருகில் கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி உதயபெரேரா நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:-என்.குமார்)




## பயிற்சி நெறி

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சிற்றூழியர்களின் பதவி உயர்வுக்கான மூன்று மாத கால பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை முதல் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

சுகாதார சிற்றூழியர்கள் 35 பேருக்கு பதவிகள் உயர்த்தப்படவுள்ளன. இதன் நிமித்தமே இவர்களுக்கு 3 மாத கால பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.

மேற்படி சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வு கடந்த 2007 ஆம் ஆண்டின் பின்னர் இவ்வருடம்தான் இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-259)

## லொறி தடம்புரண்டதில் இருவர் காயம்



(படம்:-எம்.கௌரிகாந்தன்)

(கனகபுரம்)

ஏ-9 வீதி பரந்தன் சந்தியில் லொறி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியதில் சாரதியும் உதவியாளரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் வழியில் பரந்தன் சந்தியில் லொறி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

சாரதியும் உதவியாளரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-259)

# ஆண்களுக்கான துடுப்பாட்ட போட்டி; கிளி/மகாவித்தியாலய அணி வெற்றி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு எதிரான துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 15 வயதுப் பிரிவு அணி 139 ஓட்டங்களாலும் 17 வயதுப் பிரிவு அணி 7 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றுள்ளன.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயது பிரிவுக்குரியவரின் பிரிவு 3 இற்கான துடுப்பாட்டப் போட்டி கடந்த 22 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி கிளி/மகாவித்தியாலய அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 251 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக டிலக்ஸன் 70, துஷாந்தன் 52 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மதுஷன் 3 இலக்குகளையும் லக்ஷன், பிரதீப் தலா இரண்டு இலக்குகளையும் கிருபா ஒரு இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

தொடர்ந்து 252 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி 26 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக கிளிநொச்சி மத்திய கல்லூரி சார்பில் குகன் 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்து வீச்சில் டனுஜன் 3 இலக்குகளையும் துஷாந்தன், கஜீபன், நிதுஷன், நிருத்திகன், மிதுஷன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

இதன்மூலம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 15 வயதுப் பிரிவு அணி கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியை 139 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இந்நிலையில் குறித்த துடுப்பாட்டச் சுற்றின் 17 வயதுப் பிரிவு அணியின் பிரிவு 3 இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை எதிர்கொண்டு களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய 17 வயதுப் பிரிவு அணி 7 ஓட்டங்களால் வெற்றியை தனதாக்கியது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 30.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக றஜீபன் 27 ஓட்டங்களையும் விதுல்ஜன் 25 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் அனுருத்தன் 5 இலக்குகளையும் இந்துஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

158 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் விதுஷனின் அபார பந்து வீச்சில் 31.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 151 ஓட்டங்களுக்குள் முடங்கியது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்ச ஓட்டங்களாக ஜனுசன், சாள்ஸ் முறையே 49, 34 ஓட்டங்களை அணிக்கு பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் விதுஷன் 6 இலக்குகளையும் ரவிப்பிரகாஸ் 3 இலக்குகளையும் தனுஜன் ஒரு இலக்கையும் கைப்பற்றியிருந்தனர்.

இதன்மூலம் கிளிநொச்சி மகாவித்தியாலய 17 வயதுப் பிரிவு துடுப்பாட்ட அணியும் கிளிநொச்சி மத்திய கல்லூரியை வெற்றி கொண்டு தமது வெற்றியை நிலைநாட்டியுள்ளது. (அ-ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துணுக்காய் கல்வி வலயத்தில்

## வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய கோட்டக் கல்வி திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பாடசாலைத் தோட்டம் மற்றும் கவின்கலை ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்களை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மாந்தை கிழக்கு கல்வி கோட்டத்தின் மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம், மு/பாலி நகர் மகாவித்தியாலயம், மு/பாலை பாணி தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும் துணுக்காய் கல்விக் கோட்டத்தில் மு/வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க.பாடசாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/ஐயங்கன் குள அ.த.க. பாடசாலைகளும் ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் மு/மாங்குளம் மகாவித்தியாலயம், மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை, மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலை ஆகியனவையும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

### முல்லை.மாவட்ட பிரதேச செயலகங்களில்

# நிரந்தர கணக்காளரை நியமிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், புதுக்குடியிருப்பு, வெலிஓயா, மாந்தை கிழக்கு ஆகிய ஆறு பிரதேச செயலகங்களிலும் நிரந்தர கணக்காளர் இல்லையென அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 46, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 27, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 20, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 19, வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 9, மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 15 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன.

இந்நிலையில் மேற்குறித்த பிரதேச செயலகங்களில் கணக்காளர் இன்மையால் மக்கள் தமது தேவைகளை இலகுவாக பூர்த்தியாக்க முடியாத நிலை உள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியேற்றப்பட்ட மேற்குறித்த மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இன்றுவரை கணக்காளர் இன்மையால் அபிவிருத்தி தொடர்பான வேலைகளை இலகுவாக பெறமுடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் அனர்த்தங்கள் ஏற்படும் வேளைகளில் அதற்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளை பெறுவதில் சிரமநிலை காணப்படுகின்றது. மேலும் இங்குள்ள மக்கள் வேதனங்களை பெற முடியாத நிலையும் உள்ளது.

கணக்காளருடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளையும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலேயே மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு செல்கின்றபோது பணம், நேரம் என்பன செலவாகின்றது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களில் கணக்காளர் உள்ளபோதும் முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலகங்களில் மட்டும் கணக்காளர் இல்லாதிருப்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்களில் நிரந்தர கணக்காளர் உள்ளபோதும் எமது மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் மட்டும் ஏன் நிரந்தர கணக்காளர் இல்லை என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

போரினால் அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக்கப்பட்டு வாழ்வாதாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது என்ற ஏக்கத்துடன் வாழும் இம்மக்களுக்கு பிரதேச செயலகங்களில் கணக்காளரை உடனடியாக நியமித்து அபிவிருத்தி தொடர்பான மற்றும் ஏனைய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஆவன செய்ய வேண்டும்.

எனவே, முல்லை.மாவட்ட அரச அதிபர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)




## சட்டவிரோத தொழில்புரிவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்

### சமாசத்தினர் அறிவிப்பு

(ஆனையிறவு)

ஆனையிறவு கடனீரேரியில் சட்ட விரோதமாக மீன்பிடி தொழில் ஈடு படுவோர் உடனடியாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச அலுவலகத்துடன் அல்லது சமாசத்தின் கீழுள்ள அங்கத்துவ சங்கங்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேற்கொள்ளத்தவறின் தொழில் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் சமாசத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாசத்தின் இயக்குநர் சபை தீர்மானத்தின்படி மேற்குறித்த கடனீரேரியில் கடற்றொழிலை மேற்கொள்பவர்கள் சமாசத்திலோ அல்லது சமாசத்தின் கீழுள்ள அங்கத்துவ சங்கங்களிலோ பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாது சட்டவிரோதமாக தொழிலை மேற்கொள்வோர் உடனடியாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் தொழில் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் சமாசத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-264)

## மோட்டார் சைக்கிள்-கார் விபத்து;

### இருவர் காயம்

(குருமன்காடு)


வவுனியா பட்டக்காடு முதலாம் ஒழுங்கை சந்தியில் மோட்டர் சைக்கிளும் காரும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வவுனியா குருமன்காட்டில் இருந்து பட்டக்காடு நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் மடுவில் இருந்து வவுனியா நோக்கி மன்னார் வீதி வழியாக வந்து கொண்டிருந்த காருடன் முதலாம் ஒழுங்கை சந்திப் பகுதியில் மோதியதில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் பட்டக்காட்டை சேர்ந்தவர்களான சப்ராஸ் (வயது22), அஸ்ரப் (வயது 24) ஆகியோரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

இச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-250)



## பயணிக்க முடியாத நிலையில் குமுழமுனை கிராம வீதிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமிழமுனை கிராமத்தின் பிரதான மற்றும் உள் வீதிகள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுவதாக பிரதேச மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குமுழமுனை கிராம மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேறி சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் விவசாயத்தை மேற்கொள்பவர்கள்.

மேற்படி கிராமத்தை குமுழமுனை கிழக்கு, மேற்கு, மத்தி என்ற கிராம சேவகர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் இவற்றிலுள்ள பிரதான வீதிகள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு சொந்தமாகவுமுள்ளது.

அத்துடன் கிராமத்திலுள்ள 20 இற்கும் மேற்பட்ட உள்வீதிகள் கரைதுறைப்பற்று பிரதேச சபையினருக்கு சொந்தமானவை.

இக்கிராமத்திலுள்ள வீதிகள் 1980 ஆம் ஆண்டுக்கு பின்னர் தொடக்கம் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

குறிப்பாக குமுழமு னையிலிருந்து தண்ணீரூற்று ஊடாக முல்லைத்தீவிற்கு செல்கின்ற வீதி, குமுழ முனையிலிருந்து தங்கபுரம் ஊடாக அலம்பில் வீதி, குமுழமுனை ஊடாக தண்ணிமுறிப்பு ஆகிய பிரதான வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதுடன் வாகனங்களும் பழுதடைகின்றதாக சாரதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இப்பிரதேசத்திலுள்ள சுமார் 20இற்கும் மேற்பட்ட வீதிகளும் சேதமடைந்து காணப்படுவதுடன் மழை காலங்களில் போக்குவரத்தை செய்ய முடியாத அளவுக்கு மோசமாக காணப்படுவதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆகவே, இப்பிரதேசத்தின் வீதிகளை கவனத்திலெடுத்து புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் பிரதேச சபையினருக்கும் மக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-267)





வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் அண்மையில் சிரமதானப் பணி இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

(படம்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதர்களையும் நம்பி விடுவது ஆபத்து.
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தோல்வியுறும் தொழில் முயற்சிகள் மீட்சி பெற வியூகம் அமையுங்கள்

வரும்முன்னர்க் காவாதான் வாழ்க்கை
எரி முன்னர் வைத்தூறுபோலக் கெடும்
என்றார் வள்ளுவர். வள்ளுவர் கூறும் இக் குறளின் பொருள் எதையும் வருமுன்னர் காப்பாற்றவேண்டும். அங்ஙனம் வருமுன்னர் காக்கத் தவறின் அஃது தீக்கு முன்னால் வைத்த வைக்கோல் போல ஆகிவிடும் என்பதாகும்.

வள்ளுவர் கூறிய இந்த அருமந்த குறளில் எங்களுக்கான எச்சரிக்கை இருப்பதை உணர முடியும். இப்போதெல்லாம் பலரும் தொழில் இழந்து நடுத்தெருவில் நிற்கும் பரிதாபத்திற்கு ஆளாகி உள்ளனர்.

அதிலும் குறிப்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் வெளியாரிடம் வகை தொகை இன்றி கடன் பெற்றவர்கள் இவ்வாறு தொழில் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

எல்லை மீறிய கடன்களுக்கான வட்டியின் அதிகரித்த வேகம் தொழில் முயற்சியால் கிடைக்கும் இலாபத்தை கடந்ததாக இருக்க எல்லாம் இறுகிக் கொண்டது.

இதனால் உயிர் மாய்த்துக் கொள்வது அல்லது தப்பிஓடிவிடுவது என்ற முடிவை எடுக்க, கடன் கொடுத்தவர்கள் விற்பனை,கொள்வனவு என்ற அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டவர்கள் என அனைவரும் பாதிப்படைகின்றனர்.

ஒருவரின் திட்டமிடாத தொழில் முயற்சி மற்றவர்களின் தொழிலில் முயற்சியையும் தள்ளி விழுத்தி விடுவதாக இருப்பது மிகப் பெரிய துரதிர்ஷ்டம்.

எனவே இத்தகைய ஆபத்துக்கள் தடுக்கப்படவேண்டுமாயின், அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை.

இப்போதுகூட யாழ்ப்பாணம்–கொழும்பு பஸ் சேவையை நடத்துபவர்கள் சொகுசு பஸ்ஸுக்காக செய்து இருக்கின்ற முதலீடுகள் ஏராளம்.

அதேநேரம் அவர்களின் உழைப்பில் பங்கு போடுவதில் அல்லது தொழில் வெறுப்பை ஏற்படுத்துவதில் பொலிஸ் தரப்பில் சிலர் ஈடுபட்டுள்ளதான செய்திகள் வேதனை தரக்கூடியவை.

இதற்கு அப்பால் வடக்கு நோக்கிய புகையிரதப் பாதை அமைப்பின் வேகம் யாழ்ப்பாணம்– கொழும்புக்கான மாற்றுப் பயண சேவையை தரப்போவது திண்ணம்.

அத்தகையதொரு புகையிரத சேவை கிடைக்கப் பெற்றால், சொகுசு பஸ்களில் முதலீடு செய்தவர்கள், அதில் வேலைவாய்ப்பைப் பெற்றவர்கள் நிலைமை என்னவாகும் என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாற்றுவழி பற்றியும் பதிலீடான சேவைகள் பற்றியும் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

புகையிரத வண்டி யாழ்ப்பாணத்திற்கு வரட்டும் அதன் பின்னர் சொகுசு பஸ்பற்றி சிந்திக்கலாம் என்று நினைத்தால், அங்குதான் எரி முன்னர் வைத்தூறுபோலக் கெடும் நிலைமை தோன்றும். அதன் பின்னர் எந்தவித மாற்று வழிகளும் பயனற்றதாகிவிடும்.

இதுபோன்று எங்கள் மத்தியில் பல்வேறு தொழில் முயற்சிகள் வலுப்பெற்ற நிறுவனங்களின் வருகையால் அடியுண்டு போகும் ஆபத்தான நிலையில் இருப்பது கண்கூடு.

எனவே இவைபற்றியும் சிந்தித்து எங்கள் தொழில் முயற்சியாளர்களுக்கு, ஆபத்தை எதிர்கொள்வது பற்றி விளக்கம் கொடுப்பது காலத்தின் அவசர தேவையாகும்.

இதனைச் செய்வதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் மற்றும் வர்த்தக அமைப்பு முன்வரவேண்டும்.

# மன்னாரில் 8 வீதிகள் திறப்பு விழா

(மன்னார்)

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு வேலைத்திட்டங்களின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வட மாகாண வீதி இணைப்புத் திட்டத்தின் ஊடாக புனரமைக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் சில வீதிகள் மக்கள் பாவனைக்காக நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

இவ் வீதி திறப்பு நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறூக், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ. ஏ.கே.ரணவக்க, வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி.ர.விஜயலட்சுமி, மன்னார் மாவட்ட அரச அதிபர் ஜே.ஏ. சரத் ரவீந்திர, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

தலைமன்னார் கிராமிய வீதி, கரிசல் வீதி, பேசாலை வாயாடிப்பனை வீதி, ஓலைத்தொடுவாய் வீதி, தோட்டவெளி மாலுப்பாடி வீதி, எஸ்பலனேட் வீதி, சௌத்பார் வீதி, பள்ளிமுனை கடற்கரை வீதி ஆகிய வீதிகளே திறந்து வைக்கப்படவுள்ளன. (ஏ)

# கேணல் பயிற்சியின் போது அதிபர் உயிரிழப்பு!

ரன்தம்பே பயிற்சி முகாமில் கேணலதர தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்ட ரன்தோளுகம பஞ்ஞானந்த தேசிய பாடசாலையின் அதிபர் டபிள்யூ.ஏ.எஸ் விக்கிரமசிங்க உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று ஞாயிறு காலை உயிரிழந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாரடைப்பு காரணமாக இவர் உயிரிழந்துள்ளதாக தெரியவந்த போதிலும், இச்சம்பவம் பாடசாலையில் இடம்பெறவில்லை எனவும் கேணல் பயிற்சியின்போதே இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பாடசாலைகளிலும் உள்ள அதிபர்கள் 40 தொடக்கம் 50 வயதானவர்கள் எனவும் இவர்கள் கேணல் பயிற்சிக்கு எந்தவொரு உடற்தகுதியும் இல்லாத நிலையில் பயிற்சியில் இணைத்துக் கொள்வதே இவ்வாறான நிலைக்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இன்னும் பல காலம் பாடசாலைக்கு பெரும் சேவையாற்றக்கூடிய, நாட்டின் பெறுமதிமிக்க அதிபர் ஒருவரை இப்பயிற்சி காரணமாக இழந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் கூறினார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன் ரன்தம்பே பயிற்சி முகாமிற்கு பயிற்சிக்காக சென்ற 52 வயதான குறித்த அதிபர் நேற்று ஞாயிறு காலை விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சிக்கு தயாரான நிலையில் சுகவீனமுற்று அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளதாக ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.(எ-8)

# காதல் திருமணம்

தெற்கைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட தமிழ் யுவதியொருவரை தனது பாரியாராக்கிக் கொண்ட திருமண நிகழ்வொன்று நேற்று வவுனியா தண்ணீரூற்று பிரதேசத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தின் 23-வது காலாற்படை முகாமைச் சேர்ந்த கோப்ரல் சிறிமல் பிரசங்ககுமார (வயது 22) என்ற இராணுவ வீரருக்கும் முல்லைத்தீவு முள்ளியவளை பொன்னகர் பிரதேசத்தைச் சேர்ந்த மேரி தெரேசா (வயது 20) என்ற யுவதியுமே நேற்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

இவ்விருவருக்கும் இடையில் ஏற்பட்ட காதல் தொடர்பை அடுத்தே திருமண ஏற்பாடுகள் இடம்பெற்றதாக முல்லைத்தீவு 23-வது காலாற்படை முகாமின் தளபதி கேணல் சஷிந்திர விஜேவர்தன தெரிவித்தார். (எ-11)

# முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் ஹக்கீம்-பஷீர் கடும்வாக்குவாதம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸின் அதியுயர் கூட்டத்தின்போது அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகியோருக்கு இடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தின் கூட்டம் நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை அக்கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்றபோதே,

இவர்கள் இருவருக்கும் இடையே சுமார் 15 நிமிடங்கள் இந்த வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோதே, இவர்கள் இருவருக்கும் இடையில் இந்த வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இதன்போது வட மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட வேண்டும் என தெரிவித்த பஷீர் சேகுதாவூத்,

அவ்வாறில்லாமல் இத்தேர்தலில் தனித்து போட்டியிடுவது எனில் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இந்த வாக்குவாதத்தின் போது "உங்களுக்கு என்மீது நம்பிக்கை இல்லை. இதனால் நான் எப்படி உங்களுடன் இணைந்து பணியாற்ற முடியும்" என ரவூப் ஹக்கீமிடம் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.


இதற்குப் பதிலளித்த ரவூப் ஹக்கீம், "உங்களை எப்படி நம்புவது? கிழக்கு மாகாண சபை தேர்தலின்போது கட்சியின் அனுமதியின்றி பிரதி அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தீர்கள். தற்போதும் கட்சியின் அனுமதியின்றி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை பெற்றுள்ளீர்கள். இப்படிக் கட்சிக்கு துரோகம் இழைத்துள்ள நிலையில் உங்களை எப்படி நம்புவது" என மறுகேள்வி எழுப்பியுள்ளார்.

இதனையடுத்து இவர்கள் இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் உக்கிரமடையவே, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடத்தின் கூட்டம் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படாமல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் 13-வது திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கான பிரேரணை கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் சமர்ப்பிக்கப்படும் போது அது தொடர்பில் செயற்படும் விதம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட இருந்தது. (எ-8)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### குடும்பக் கலை



யோகமுறையிலே எளிய முறைக்குண்டலினி யோகம் என்ற ஒன்று முக்கியமானது.அதன் பிறகு உடற்பயிற்சி அதற்கு மேலாக அகத்தாய்வு. அகத்தாய்விலே எண்ணம் ஆராய்தல் ஆசை சீரமைத்தல் சினம் தவிர்த்தல் கவலை ஒழித்தல் நான் யார் என்று வினா எழுப்பி விடை காணுதல் என்ற அளவிலே வருகிற போது இந்த உடலெல்லாம் தெளிந்த போது மனமும் தூயதாகத் தெளிவாக இருக்கிறது.


இருட்டிலே இருக்கின்ற போது அங்கு நல்ல வெளிச்சம் வந்தால் எப்படியிருக்கும்? மேல் தளத்திலிருந்து படியிலே இறங்குகின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். விளக்கு இல்லை சில சமயம் படி இருப்பதே தெரியவில்லை என்றால் என்னவாகும்? ஆனால், படி இருக்கிறது என்று தெரிந்து விளக்கும் இருந்தால் எப்படியிருக்கும்? அதே போல் வாழ்க்கையிலே தெரிந்து கொள்வதற்கும் தெரிந்ததை நடத்தி திருந்தி நாம் உறுதி எடுத்துக் கொண்டு அந்த முறையிலே வாழ்வதற்கும் ஏற்றதோர் பயிற்சி தான் மனவளக்கலை.

அதற்கு மேலாக உடலை நன்கு உறுதியாக வைத்துக்கொண்டு ஆன்மாவை வளர்த்துக் கொள்வதற்குப் பெருந்துணை புரியும் கலை தான் காயகல்ப்பக்கலை. அதை ஒழுங்காகச் செய்து வந்தால் மனிதன் எந்த நிலைக்கு உயர வேண்டுமோ அந்த நிலைக்கு உயரலாம்.

குண்டலினி யோகம் செய்வதற்கு உயிராற்றல் போதிய அளவு வேண்டும். அந்த உயிராற்றலுக்கு வித்து ஆற்றலும் வேண்டும்.இதை யெல்லாம் உறுதிப் படுத்திக் கொடுக்கக் கூடியது காயகல்ப்பம். காயகல்ப்பம் குண்டலினி யோகத்திற்கு உதவியாக இருக்கிறது.குண்டலினி யோகம் காயகல்ப்பத்திற்கு உதவியாக இருக்கிறது. ஆகவே, இரண்டு வழியாலும் நாம் உடலையும் மனத்தையும் இணைத்து முன்னேற்றப் பயிற்சி செய்கிறோம். இது குடும்பங்களுக்கெல்லாம் மிக அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புகளுக்கு தடை



(கொழும்பு)

க.பொ.த. உயர்தர பரீட்சைகள் நடைபெறவுள்ளமையை முன்னிட்டு சகல பிரத்தியேக வகுப்புகளும் கருத்தரங்குகளும் எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மாலை வரை நடத்துவதற்கு தடை என பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என். ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை க.பொ.த. உயர்தர பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதனை முன்னிட்டே உயர்தரத்துக்குரிய சகல பிரத்தியேக வகுப்புகள், மீட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உத்தரவிட்டிருந்தார்.

அவரின் உத்தரவிற்கமையவே இதை அமுல்படுத்துவதாகவும் பொலிஸ்மா அதிபர் ஊடாக சகல பிரிவுகளிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

தடையை மீறி பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகளை நடத்துபவர்களுக்கு எதிராக பரீட்சைகள் சட்டத்தின் கீழும் குற்றவியல் சட்டத்தின் கீழும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேபோன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதனை முன்னிட்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் 25 ஆம் திகதி மாலை வரை 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஏதுவான பிரத்தியேக வகுப்புகள், மீட்டல் வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்துவதும் தடை செய்யப்படுகிறது.

அத்துடன் இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் நாளைய தினம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

எனவே, அனுமதி அட்டைகள் கிடைத்தவுடன் உடனடியாக தாமதிக்காமல் மாணவர்களிடம் கையளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

ஏனெனில் அனுமதி அட்டையில் திருத்தங்கள் செய்வதற்கு இது ஏதுவாக அமையும் என்றும் அனுமதி அட்டைகளில் திருத்தங்கள் செய்வதற்கு எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்

(கொழும்பு)

பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கலஹா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மது போதையில் கடமையாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ-2)


## கைதிகள் அதிகரிப்பால் இடநெருக்கடி

வெலிக்கடைச் சிறைச்சாலையில் பாரியளவில் கைதிகளின் நெரிசல் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

10 ஆயிரம் கைதிகள் தற்போது இங்கு மேலதிகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இச் சிறைச்சாலையில் 11 ஆயிரத்து 782 பேரை மட்டுமே தடுத்து வைக்கக் கூடிய வசதிகள் உள்ள நிலையில் தற்போது 22 ஆயிரத்து 525 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பாரியளவில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)





இருபாலை கிட்ஸ் காடனின் மழலைகளுக்கான விளையாட்டு நிகழ்வு அண்மையில் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தின் மைதானத்தில் த.வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. இவ் விளையாட்டு நிகழ்வில் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# 13 ஆவது திருத்தம் நீக்கப்படுவதை கிழக்கு மாகாணசபை ஆதரிக்காது

## முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்

தேசிய அரசியலில் தற்போது எழுந்துள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று முன்தினமிரவு கூடி ஆராய்ந்திருந்த நிலையிலும் அரசாங்கத்திலிருந்து விலகுவது தொடர்பில் எவ்வித தீர்மானங்களையும் அந்தக் கட்சி எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

13 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவளிக்க கூடாது என்று வலியுறுத்தப்பட்டதுடன் இந்தச் சட்டமூலம் கிழக்கு மாகாண சபையில் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதற்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களிப்பதெனவும் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

கிழக்கு மாகாண சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவரான ஏ.எம்.ஜெமீலைத் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திலிருந்து எங்களது கட்சி விலகுவது தொடர்பில் எந்தத் தீர்மானத்தையும் நாங்களாக எடுக்கப் போவதில்லை. தேவையெனில் அரசாங்கம் எம்மை நீக்கிக் கொள்ளட்டும். 13 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான வாக்களிப்பு கிழக்கு மாகாண சபைக்கு வரும் போது அதற்கெதிராக வாக்களிப்பது என்று எம்மால் ஏலவே எடுக்கப்பட்டிருந்த முடிவை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே நேற்று முன்தினம் இந்தக் கூட்டம் இடம்பெற்றது எனத் தெரிவித்தார்.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் எவ்வித மாற்றங்களையும் கொண்டு வரக்கூடாது என்பது தொடர்பில் கிழக்கு மாகாண சபையில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது தெரிந்ததே. இதன் காரணமாக அந்தக் கட்சி அதிருப்தி அடைந்துள்ள நிலையில் இது தொடர்பில் நேற்றுமுன்தினமிரவு கூடி ஆராய்ந்துள்ளது. (அ-2)

## மாகாணசபை தேர்தல்களில் மு.காங்கிரஸ் தனித்து போட்டி

நடைபெறவுள்ள வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் என அறிவித்துள்ளது.


இவ் அறிவிப்பை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கண்டியில் நேற்றையதினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்த கட்சியாக இருந்தாலும் அதன் தனித்துவம் பாதுகாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் தேர்தல்களில் தனித்து போட்டியிடுவதும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதும் கட்சியின் தனித்துவமாகும் என அவர் தெரிவித்தார்.

எனினும் சிலநேரங்களில் இந்த தீர்மானத்தில் மாற்றங்கள் ஏற்படலாம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

## பொதுநலவாய மாநாட்டுக்கு மலேசியா ஒத்துழைப்பு வழங்கும்



(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டிற்கு மலேசியா பூரண ஒத்துழைப்பை வழங்குமென அறிவித்துள்ளது.

தன்சானியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த மலேசிய பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

தன்சானியாவில் இடம்பெற்ற மாநாட்டிற்காக சென்ற மலேசிய பிரதமரை ஜனாதிபதி மஹிந்த சந்தித்துப் பேசியுள்ளார்.

தன்சானியாவுக்கான விஜயத்திலிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து சீசெல்ஸிற்கான இரண்டு நாட்கள் சுற்றுலா விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விம்பிள்டன் டென்னிஸ்

# ஜோகோவிச், செரினா 4-வது சுற்றுக்கு தகுதி



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது. உலகின் முதல் நிலை வீரரும், 2011-ம் ஆண்டு சம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) 3-வது சுற்றில் பிரான்சை சேர்ந்த ஜெர்மி ஜார்டியை எதிர்கொண்டார். இதில் ஜோகோவிச் 6-3, 6-2, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார். 4-வது சுற்றில் அவர் 13-ம் நிலை வீரரான டோமிஹாசை (ஜெர்மினி) சந்திக்கிறார்.

இதேபோல 4-ம் நிலை வீரரான டேவிட் பெரர் (ஸ்பெயின்) 6-7 (6-8), 7-6 (7-2), 2-6, 6-1, 6-2 என்ற கணக்கில் உக்ரைன் வீரர் அலெக் சாண்டிரை போராடி வென்றார். பெரர் 4-வது சுற்றில் குரோஷிய வீரர் இவான் டோடிக்கை எதிர்கொள்கிறார். மற்ற ஆட்டங்களில் 7-ம் நிலை வீரர் தாமஸ் பெர்டிச் (செக்குடியரசு), யூஜ்னி (ரஷியா), டோமி ஹாஸ் (ஜெர்மன்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார். முதல் நிலை வீராங்கனையான அவர் 3-வது சுற்றில் ஜப்பானை சேர்ந்த கிமிகோவை 6-2, 6-0 என்ற கணக்கில் வென்றார். 14-ம் நிலை வீராங்கனையான சமந்தா ஸ்டோசுர் (அவுஸ்திரேலியா) 3-வது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். 23-ம் நிலை வீராங்கனையான லிசிகி (ஜெர்மனி) 4-6, 6-2, 6-1 என்ற கணக்கில் சமந்தாவை வீழ்த்தி 4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

# 2016, 2023-ம் ஆண்டுகளில் உலகக் கோப்பை இந்தியாவில்



ஐசிசி ஆண்டு பொதுக்குழு கூட்டம் லண்டனில் நடந்து வருகிறது. இந்த கூட்டத்தில் வரும் 2023ல் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்தும் உரிமை இந்தியாவிற்கு வழங்கப்பட்டது.

மேலும் 2016-ல் 20-20 உலகக்கோப்பையும், 2021-ல் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகளும் இந்தியாவில் நடத்தப்படுகிறது. டெஸ்ட் சாம்பியன்ஷிப் முதல் தொடர் 2017ம் ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் இங்கிலாந்தில் நடைபெறும் என்றும் ஐ.சி.சி அறிவித்துள்ளது.

மேலும் களத்தில் பந்தை சேதப்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வீரர் பந்தை சேதப்படுத்தியது தெரியவந்தால் அந்த அணியின் துடுப்பாட்டத்தில் 5 ரன்கள் குறைக்கப்படும். மேலும் அணியின் தலைவர் மீதும் நடவடிக்கை பாயும்.

# ரயர்கள் வெடித்த நிலையில் தரையிறங்கிய விமானம்

## பயணிகள் அல்லோல கல்லோலம்

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு சொந்தமான போயிங 737 விமானம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் புதுடில்லி விமான நிலையத்தின் மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

70 பயணிகளுடன் வந்த அந்த விமானத்தை ஓடுபாதையில் இறக்கிய விமானிகள் சக்கரங்களின் "பிரேக்" பிடிக்கவில்லை என்று கட்டுப்பாட்டு அறைக்கு அவசர தகவல் அளித்தனர்.

இதனையடுத்து, அந்த விமானத்தை பாதுகாப்பாக இழுத்து வருவதற்கான ஏற்பாடுகளை டில்லி விமான நிலைய அதிகாரிகள் அவசர அவசரமாக செய்தனர்.

இலங்கை விமானத்தின் அருகே சென்று பார்த்த போது 2 டயர்களும் வெடித்து இருந்தது தெரிய வந்தது.

காற்று இல்லாத டயருடன் விமானத்தை இழுத்து வருவது ஆபத்து என்பதால் பயணிகள் அங்கேயே இறங்கவைத்து அவர்களை பஸ்களின் மூலம் விமான நிலைய கட்டிடத்திற்கு அதிகாரிகள் அழைத்து வந்தனர்.

விமானி தக்க நேரத்தில் தகவல் தெரிவிக்காமல் இருந்தால் டயர் வெடித்த அந்த விமானம் ஓடுபாதையில் தாறுமாறாக ஓடி பெரிய விபத்தை ஏற்படுத்தி இருக்கும்.

இலங்கை விமானம் ஓடுபாதையின் குறுக்கே நின்றதால் மற்ற விமானங்கள் எல்லாம் மாற்று ஓடுபாதை வழியாக திருப்பி விடப்பட்டன.

புதிய சக்கரங்கள் பொருத்தப்பட்ட பின்னர் அந்த விமானம் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.(எ-1)

# ஷில்பா ஷெட்டிக்கு தொடர்பில்லை!

## பொலிஸார் திடீர் பல்டி



ஐ.பி.எல். ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை சேர்ந்த சிறிசாந்த், சண்டிலா, அங்கித் ஆகியோர் ஈடுபட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்த ஸ்பாட்பிக்சிங் சூதாட்டம் குறித்து டெல்லி பொலிசார் விசாரணை நடத்தி வந்தனர். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரும், நடிகை ஷில்பா ஷெட்டியின் கணவருமான ராஜ்குந்த்ராவுக்கும் சூதாட்டத்தில் தொடர்பு இருந்த தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக டெல்லி பொலிசார் அவரிடம் விசாரணை நடத்தி பாஸ்போர்ட்டை பறிமுதல் செய்தனர். கடந்த 3 ஆண்டுகளாக ராஜ்குந்த்ரா பெட்டிங்கில் (சூதாட்டம்) ஈடுபட்டு ரூ.1 கோடி வரை இழந்ததாக அவர் கூறியதை பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஷில்பா ஷெட்டியும், ராஜ்குந்த்ராவும் நேர்மையானவர்கள். எந்த தவறும் செய்யவில்லை என்று டெல்லி பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல். ஸ்பாட்பிக்சிங் சூதாட்டத்தில் இருவரும் ஈடுபட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று டெல்லி பொலிசார் தெரிவித்து உள்ளனர்.

தங்களது விசாரணையின் முடிவில் ஷில்பா ஷெட்டிக்கும், ராஜ்குந்தராவுக்கும் ஐ.பி.எல். ஸ்பாட் பிக்சிங்கில் தொடர்பு இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று ஜெய்ப்பூர் பொலிஸ் கமிஷனருக்கு டெல்லி பொலிசார் கடிதம் எழுதி உள்ளனர்.

# சூதாட்டத்தில் ஈடுபட்டேன்



சூதாட்டத்தில் ஈடுபட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் சல்மான் பட் முதன் முறையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

அத்தோடு தனது நடவடிக்கைகளுக்காக மன்னிப்புக் கோருவதாகவும் சல்மான் பட் தெரிவித்துள்ளார்.

சல்மான் பட் இற்கு சர்வதேசக் கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்ட 10 வருடப் போட்டித் தடையில் 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட தடை என்பதால் அவரால் 5 வருடங்களின் பின்னர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியுமென்பதால், தான் இதுவரை 3 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளதால், உள்ளூர்ப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் சல்மான் பட் தெரிவித்துள்ளார்.

சூதாட்டத்தில் ஈடுபட்ட தனது நடவடிக்கை காரணமாக ஏமாற்றமடைந்த அனைவரிடம் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்த சல்மான் பட், தனது நடவடிக்கை காரணமாக கிரிக்கெட்டின் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்திற்காகவும் மன்னிப்புக் கோருவ தாகவும் இவ்வாறான தவறுகள் வீரர்களையும், கிரிக்கெட்டையும் பாதிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

2010-ம் ஆண்டு இங்கிலாந்தில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பணத்தைப் பெற்றுக் கொண்டு சல்மான் பட், மொஹமட் ஆமிர், மொஹமட் ஆசிப் ஆகியோர் முறையற்ற பந்தை வீசியமைக்காக முறையே 10, 5, 7 வருடங்கள் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜே.வி.பி...

கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான விமல் வீரவன்ச, ஜே.வி.பி.யிலிருந்து விலகி ஜே.என்.பி என்றொரு தனிக் கட்சியை ஆரம்பித்த போது கட்சி இரண்டாக பிளவுபட்டது.

அதன் பின்னர் அண்மைக் காலத்தில் முற்போக்கு சோஷலிச முன்னணி என்ற பெயரில் ஜே.வி. பி. யில் இருந்த ஒரே தமிழ்த் தலைவர் குமார் மாத்தயாவினால் இன்னொரு கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போதும் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் கணிசமான பிளவு ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் கட்சியின் ஸ்தாபகர் ரோஹண விஜேவீரவின் மைத்துனர் டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்ணான்டோவினால் விடுதலையின் பாதை (விமுக்தி மாவத) எனும் பெயரில் புதுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் ஆரம்பகால சின்னமான அரிவாள் மற்றும் சுத்தியல் என்பன புதிய கட்சியின் சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறுபான்மையினரின் பிரச்சினைகள் மற்றும் நாட்டின் பிரச்சினைகளில் ஜே.வி.பி.யினர் அரசுக்கெதிரான தீவிர போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதன் காரணமாக அரச மேல் மட்டத்தின் ஆதரவுடன் அக்கட்சியினை பலவீனப்படுத்தும் வகையில் புதிய கட்சி ஆரம்பிப்பதற்கான அனுசரணை வழங்கப்பட்டுள்ள தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(எ-8)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2014 இற்கு முன்...

எதிரான புதிய நடைமுறைகள் போன்ற விடயங்களை முன்வைத்து அவர் பெரும்பான்மை சிங்கள மக்களின் அதிகூடிய ஆதரவைப் பெற்று ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்ள முனைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்மூலம் இலங்கை மக்கள் மாகாண சபை முறையை எதிர்ப்பதாகவும், அதனை மாற்றியமைப்பதற்கு தனக்கு சர்வஜன ஆணையை வழங்கியுள்ளதாகவும் சர்வதேசத்திற்கு காட்டிக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுவதாக தெரிகிறது.

இதற்கிடையே ஜனாதிபதியின் காய் நகர்த்தல்கள் தொடர்பில் நம்பகமான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய முன்னணிபோன்றவற்றை இணைத்துக் கொண்டு எதிர்கால அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-8)

# அரசுக்கும் மு...

தீர்மானத்தை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தால் உறுதியாக அரசாங்கத்தோடு இருக்க முடியாது. அரசாங்கத்தோடு இருந்தால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் உறுதியாக இருக்க முடியாது. முஸ்லிம் காங்கிரசுடனும் அரசாங்கத்தோடும் ஒன்றாக இருந்தால் அரசின் பங்காளிக்கட்சி என்ற அடிப்படையில் முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்ற முடியாது. இது தான் நான் கண்ட அனுபவமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிரே மூன்று மாகாணசபை தேர்தல்கள் நடைபெறப் போகின்றன. விஷேடமாக வடமாகாண சபை தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவதென்றால் அரசிலிருந்து வெளியேறி விட்டு தனித்து போட்டியிடுவதே இன்றைய காலத்துக்கு பொருத்தமானதாகும். இவ்வாறில்லாமல் அரசுக்குள் இருந்து கொண்டு தனித்து போட்டியிட்டால் அரசுக்கு குழி பறிக்கும் ஒரு கட்சியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசு பார்க்கும்.

இதனால், அரசுக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் உள்ள இடைவெளி இன்னும் அகலமும் ஆழமுமாகிவிடும். இதனால் கட்சிக்கும் கட்சி தொண்டர்களுக்கும் ஆபத்துக்கள் ஏற்படலாம் என்ற அச்சமும் எனக்குள் இருக்கின்றது. இது என்னுடைய அரசியல் பார்வையாகும். எல்லோரும் அரசாங்கத்திருந்து வெளியேறுவோம் என்றால் நானும் வெளியேறுவதற்கு தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (எ-8)

# பொருளா...

சுதந்திர வர்த்தக உடன்பாட்டின்சில முக்கிய சரத்துக்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டு 2000ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையே இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான முதலாவது கூட்டு வர்த்தக உடன்படிக்கையாகும்.

இலங்கையில் இடம் பெற்ற போருக்குப் பின்னரான காலத்தில் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மற்றும் மத்திய பெருந்தோட்டப் பகுதி மக்களுக்கான வீட்டுத்திட்டம், போக்குவரத்து கட்டுமான அபிவிருத்தி போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை இலங்கையில் இந்தியா மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்புடையமற்றொருசெய்தி 4ஆம் பக்கத்தில்) (எ-8)

# ஆஸி.செல்...

ஏற்றிக் கொண்டு கடலூர் செல்ல தயாராக இருந்த வான் ஒன்றை சோதனையிட்ட பொலிஸார் இலங்கைத் தமிழர்கள் ஐந்து பேரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-8)


## Clerk தேவை

யாழ். நகரிலுள்ள நிறுவனம்
ஒன்றிற்கு 40 வயதிற்கு
உட்பட்ட

Clerk (Female) தேவை

T.P:- 0217904941

(C-3822)


# வட இந்தி...

குப்புறமான மலைப் பகுதிகளில் சிக்குண்டுள்ளனர்.

இந்து புனிதத் தலங்கள் பல இந்த மாநிலத்தில் அமைந்திருக்கின்றன. (எ-8)


## பொதிகள் சேவை

சகல நாடுகளுக்குமான பொதிகள்
ஆவணங்கள்

வெளிநாடுகளுக்கு 3-4 நாட்களிலும்
கொழும்பிற்கு மறுநாளிலும்
ஒப்படைக்கப்படும்

- மிகவிரைவாக
- பாதுகாப்பாக
- குறைந்த கட்டணத்தில்
- மறைமுக கட்டணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்



SKYWAY EXPRESS
இல.355A, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(சிவன் கோவில் அருகில்)

T.P : 021 221 9792
T.P : 021 320 2634

(C-3823)



union assurance

## வேலைவாய்ப்பு

**இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 25 வருடங்களை பூர்த்தி செய்துள்ள யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் புதிய சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்**

☆ முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
☆ முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (A.D.M)
☆ சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர்(S.A.D.M)

- மேற்படி பதவிக்கான Basic Allowance 20500/= தொடக்கம் 39000/= வரை.
- ORC மற்று ம் மேலதிக நன்மைகளும்
- Brilliant Starter Advisar Allowance
- மோட்டார் வாகனக் கடன் 1500000 வரை
- மடிக்கணனி (Laptop)
- வீட்டுக் கடன் 1000000/= தொடக்கம் 10000000/= வரை

**மேற்படி பதவிக்கான தகைமை**

- எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஒரு வருட காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன்அனுபவம் இருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.

காலம் : புதன்கிழமை (03.07.2013)
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: யூனியன் அசூரன்ஸ்
இல. 160 1/6 K.K.S வீதி,
சுன்னாகம் (சம்பத் வங்கிக்கு மேல்)

தொடர்புக்கு: 0773664160

(C-3824)


# வடமாகாண...

சீசெல்சுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அந்நாட்டு ஜனாதிபதி ஜேம்ஸ் மிஷெல்க்கும் இடையில் ராஜதந்திர சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் 3 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. தொழிற்பயிற்சி, இளைஞர் அபிவிருத்திக்கான புரிந்துணர்வுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு உடன்பாடு போன்ற மூன்று விடயங்களை உள்ளடக்கிய ஒப்பந்தங்களே இதன்போது கைச்சாத்திடப்பட்டன.

சிசெல்ஸ் அரச மாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவம் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்று சிசெல்ஸ் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அத்துடன், சிசெல்சுக்கு வருகை தந்த இலங்கையின் முதல் ஜனாதிபதி என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிசெல்ஸ் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார். யுத்தத்துக்கு பின்னர் வடக்கின் அபிவிருத்திக்காக இலங்கை அரசாங்கம் 300 கோடி டொலர்களை செலவளித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வட மாகாணசபைத் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படவுள்ளது.

இதற்கான உறுதியினை நான் எமது மக்களுக்கே வழங்கியுள்ளேன். சர்வதேசத்துக்கு அல்ல என்றும் ஜனாதிபதி இதன்போது எடுத்துக் கூறினார். (எ-8)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை சிங்கராஜர் (குலம்)



மலர்வு:-14.09.1948
உதிர்வு:-29.06.2013

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அந்தோனியார் பதியை வசிப்பிடமாகவும், ஜெர்மனி ஒஸ்னாபுறுக்கை வாழ்விடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை சிங்கராஜர் அவர்கள் 29-06-2013 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, றோசமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை, அக்னேஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும்,

மேரி புஸ்பவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருள்வளன், மற்றும் அருள்வாணி, அருள்வதனி, அருள்தாசன் ஆகியோரின் நேசமிகு தந்தையும், ஜோசப்பின், அன்ரனி அல்பிரட், சகாயநாயகி, அன்ரனிதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அன்ரனி அமிர்தநாதர், திருச்செல்வராஜா, மேரி ஜசிந்தா, கலைமதி ஆகியோரின் மைத்துனரும், அருள்தந்தை இன்பநாதன் (நோர்வே), அன்புதாசன், கமிலஸ், சுஜாதினி, செந்தா, அமல்றோசினி, பிறின்சியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், றொபின், ஜானுகா, சகானா, ஜெனுஷன் ஆகியோரின் நேசமிகு பெரியப்பாவும், கவின்வளன், ஜெவ்ரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனி ஒஸ்னா புறுக்கில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :- குடும்பத்தினர்.
4 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

தொடர்புகளுக்கு :-
அமிர்தநாதர்-ஜெர்மனி : +49541740355
அருள்-ஜெர்மனி : +4915217022864
கமிலஸ்-பருத்தித்துறை : 0772157554
அருள்தந்தை இன்பநாதன் : நோர்வே : +4792058814

(C-3821)


## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
02[illegible] / 077[illegible]

(C-3812)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org